Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு+II
விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

TCV தேவி கருமாரி
நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
66. Kasthuriar Road, Jaffna
66. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 11 | ஹிஜ்ரி 1427 ஸபர் 24 | (25.03.2006) | சனிக்கிழமை | இதழ் 175







# உயர் தொழில்நுட்ப நிறுவனத்துள் படையினர் நுழைந்து தாக்குதல்!

## பல மாணவர்கள் காயம்

யாழ்ப்பாணம்

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்குள் நேற்று அத்துமீறி நுழைந்த 50 இற்கும் அதிகமான படையினர் அங்கு ஏற்றப்பட்டிருந்த தமிழீழ தேசியக்கொடியை இறக்கியதுடன் - மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கினர். இதனால் அங்கு பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.

உயர் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் அன்னை பூபதியின் நினைவு தின நிகழ்வு வழமைபோல நேற்றுக்காலை 9.45 மணியளவில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தவேளை, பவள் கவச வாகனங்களில் வந்த 50 இற்கு மேற்பட்ட படையினர் வளா கத்தின் உள்ளே நுழைந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பூரண ஹர்த்தால்!

திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்தில் அரசினதும், படையினரதும் நடவடிக்கையைக் கண்டித்து நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் திருகோணமலை மாவட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் ஸ்தம்பித்து, இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

மூதூர் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் கடந்த இருதினங்களுக்கு முன்னர் கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான (12 ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புத் துணியுடன் படையினர்!

யாழ்ப்பாணம்

படையினர் முகத்தை கறுப்புத்துணியால் மூடிக்கட்டியவாறு கடமையில் ஈடுபடக்கூடாது என யாழ். மேலதிக நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்த போதும் - படையினர் அதனை மீறும் வகையில் கறுப்புத் துணியைக் கட்டியவாறு கடமையில் ஈடுபடுகின்றனர்.

நேற்றைய தினம் உயர் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் குவிக்கப்பட்ட படையினரில் அதிகமானவர்கள் முகத்தை கறுப்புத் துணியால் கட்டியவாறு மாணவர்களைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த உடன்பாட்டில் பெருமளவு குறைபாடுகள்!

# இனிமேலும் அடக்குமுறைகள்; பொறுத்துக்கொள்ள முடியாது!

# பெருமளவு குறைபாடுகள்!

## என்கிறார் இராணுவத் தளபதி




கொழும்பு —

போர்நிறுத்த உடன்பாட்டில் ஏராளமான குறைபாடுகள் உள்ளன. இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட முன்னர் இராணுவத்தின் கருத்தை கேட்டறிந்திருந்தால் - இந்த உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்ட கடும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டோம் என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நவீன தொழில் நுட்பத்துடன் புதுப்பிக்கப்பட்ட இலங்கை இராணுவத்தின் இணையத்தளத்தை நேற்றுக்காலை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொறுத்துக்கொள்ள முடியாது!

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



மன்னார் —

தமிழ் மக்கள்மீது இராணுவத்தினர் திட்டமிட்டு தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஒடுக்குமுறைகளை இனியும் நாம் பொறுத்துக் கொள்ள மாட்டோம் எனத் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

மன்னார் - ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் அந்தப் பிரதேச மக்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆற்றிய சிறப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் சமாதானப் பேச்சுக்களில் பொறுமையுடன் ஈடுபட்டு வந்தோம். (12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு மாநகரசபை வேட்புமனு நிராகரிக்கப்பட்டது சட்டபூர்வமானதே!

## மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு —

கொழும்பு மாநகரசபைக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரித்தமை சட்டபூர்வமானது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யவுள்ளதாக ஐ.தே.கவின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் கொழும்பு மாநகர சபைக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து ஐ.தே.கவின் செயலாளர் என்.வி.கே.கே. வேரகொட மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனு மீதான தீர்ப்பு நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளதாவது -

2004 ஆம் ஆண்டு வேட்பாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் அத்துமீறலுக்கு அரசியல்துறை கண்டனம்!

யாழ்ப்பாணம் —

திருநெல்வேலி உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில்நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் அத்துமீறி நுழைந்த படையினர் - விரிவுரையாளர்கள், மாணவர்களை படுமோசமாகத் தாக்கியதுடன், சொத்தழிப்பையும் மேற்கொண்டனர் என்பதை தங்களுக்கு விசனத்துடன் அறியத்தருகிறோம் என யாழ். மாவட்ட அரசியல்துறை - மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு அனுப்பிவைத்த கண்டனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கடந்த இரு நாட்களாக படையினர் வேண்டுமென்றே உள் நோக்கத்துடன் கூடிய அத்துமீறலை இங்கு செய்துவருகின்றனர்.

படையினரது இந்தத் தாக்குதல்கள் பின்வரு வகையில் அத்துமீறல்களாக உள்ளன.

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் அதிபர், அதிகாரிகளின் அழைப்பின்றி படையினர் உட்புகுந்தமை - அமைதிக்கும், கல்விக்கும் குந்தகம் விளைவித்தமை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழத்துக்கான வசதிகளை வழங்குவதே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு!

## என்கிறார் கொட்டகதெனிய



கொழும்பு —

விடுதலைப் புலிகளுக்கு தமிழீழத்தை வழங்குவதற்கான வசதிகளை அளிக்கும் நிறுவனமே இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு என்று பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனிய தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

போர்நிறுத்தம் செயற்படுத்தப்பட்ட காலம் தொடக்கம் திருகோணமலையில் கடற்படைப் படகுமீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்ததுவரை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கண்ணை மூடிக்கொண்டு செயற்பட்டதன்மூலம் அதன் பக்கச் சார்பு நிரூபிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை பக்கச்சார்பின்றி செயற்படுத்துவதற்கு நோர்வேக்கு ஆற்றல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பிய ஒன்றிய ஆலோசகர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை நடத்தும் உளவியல் சுகாதாரம் சம்பந்தமான பயிற்சி நெறிகளுக்கு நிதிப் பங்களிப்பு வழங்கும் ஐரோப்பிய யூனியனின் ஆலோசகர் பேராசிரியர் ஸ்ரீவன் எம்.நீயூமென் ஆறுநாட்கள் விஜயத்தை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

இவர் இன்று மாலையும், நாளையும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை ஆளுநர்சபை உறுப்பினர்களையும், டென்மார்க் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடுவார்.

திங்கட்கிழமை காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண வதிவிடப்பிரதிநிதி மற்றும் சுகாதார ஆலோசகர்கள் டொக்டர் ஏ.சிவராஜா, திவ்வியகுமார் ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

மாலை கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்துக்கு விஜயம் செய்து அங்கு நடைபெறும் பயிற்சிப்பட்டறையிலும் கலந்து கொள்வார். தொடர்ந்து உளவளத்துறை பேராசிரியர் தயா சோமசுந்தரம், கோகிலா மகேந்திரன் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

செவ்வாய்க்கிழமை வடமராட்சி கிழக்கு - கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சென்று பயிற்சிநெறிகளைப் பார்வையிடுவதுடன் அங்கு நடைபெறும் பயிற்சிப் பட்டறையிலும் கலந்துகொள்வார்.

புதன்கிழமை காலை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் உளவளத்துறை இணைப்பு அதிகாரிகளையும் சந்திப்பார்,

பகல் மண்டைதீவு மகாவித்தியாலயம், கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைளைப் பார்வையிடுவார். மாலை ஊர்காவற்துறை நடவடிக்கைக்குழு உறுப்பினர்களைச் சந்திப்பதுடன் அங்கு நடைபெறும் பயிற்சிப் பட்டறையிலும் கலந்து கொள்வார்.

வியாழக்கிழமை காலை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை ஆளுநர்சபை உறுப்பினர்கள், இத்திட்டங்களுக்குப் பொறுப்பான டென்மார்க் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், திட்ட இணைப்பாளர்களையும் சந்தித்து கலந்துரையாடியபின் கொழும்பு திரும்புவார். (21)

# கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் இருவர் பாகிஸ்தானுக்கு பயணம்

யாழ்ப்பாணம்

உலக சமூக அமைப்பால் பாகிஸ்தான் கராச்சி நகரில் நடத்தப்படும் 10 நாள் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் இருவர் பாகிஸ்தான் சென்றனர்.

மார்ச் 24 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை நடைபெறும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளும் சம்மேளனத் தலைவர் சி.தவரத்தினம், பொதுமுகாமையாளர் இ.இராசாராம் ஆகியோர் நீதிக்கும் சமாதானத்துக்குமான அபிவிருத்தி தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

இதில் சமாதானம், நீதி, அபிவிருத்தியில் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்கள் போருக்கு முன்னும், போரின் போதும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், உயர்பாதுகாப்பு வலயம், கடற்தொழிலாளர் பாஸ் நடைமுறை தற்போதைய நிலை, கடற்தொழில் அபிவிருத்தி ஆகிய விடயங்களை பயிற்சிப் பட்டறையில் முன்வைக்கவுள்ளனர். (21)

# கையடக்கத் தொலைபேசி பாவனைக்கு தடை

சாவகச்சேரி

சாவகச்சேரி பொது நூலகத்தில் கையடக்கத் தொலைபேசிப் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

கையடக்கத்தொலைபேசிகள் ஒலிக்கும்போது வாசகர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்தே பிரதம நூலகர் மேற்படி நடவடிக்கைளை மேற்கொண்டார்.

அழைப்புமணியை நிறுத்தி அதில் அதிர்வலையை கைத்தொலை பேசியில் ஏற்படுத்துவதன் மூலம் உள்வரும் அழைப்பைப் பெற்று நூலகத்துக்கு வெளியில் சென்று உரையாடலாம் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. (29)

# புலமைப் பரிசிலில் சித்தியடைந்தோரை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு!

சங்கானை

சங்கானைக் கல்விக்கோட்ட ஆரம்பக் கல்வி அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் 100 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மு.ப.9 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிழ்வில் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், பிரதிக் கல்விப் பணப்பாளர் சு.சுந்தரசிவம், யாழ்.மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் து.ரகு, மக்கள் வங்கியின் சங்கானை முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை உட்பட பலர் பாராட்டுரை வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர். (48)

# உரும்பிராய் வயோதிபரை முகமாலையில் காணவில்லை

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்

உரும்பிராயைச் சேர்ந்த வயோதிபர் முகமாலையில்காணாமல்போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரும்பிராய் மேற்கு உரும்பிராயைச் சேர்ந்த தர்மலிங்கம் (வயது 70) என்பவரே காணாமல் போயுள்ளார். இவர் கடந்த 22 ஆம் திகதி கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தனது மனைவியுடன் வந்த போது முகமாலையில் இராணுவ சோதனைச் சாவடிப் பகுதியில் யாழ்ப்பாணம் வருவதற்காக அங்குநின்ற பஸ்ஸில் அவரும் அவரது மனைவியும் ஏறியுள்ளனர். அந்தச்சமயம் அவரை அமரச்சொல்லி கூறிவிட்டு அவரது மனைவி தண்ணீர் எடுப்பதற்காக பஸ்ஸிலிருந்து இறங்கி சென்றுள்ளார்.

பின்பு மனைவி தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து பார்த்தபோது குறிப்பிட்ட பஸ் சென்றுவிட்டது. எனினும் அந்த பஸ்ஸில் தனது கணவர் சென்றிருக்கலாம் என எண்ணி மனைவி அடுத்த பஸ்ஸில் யாழ்ப்பாணத்தை அடைந்தார். எனினும் மனைவி வீடு சென்று பார்த்தபோது அவரது கணவர் அங்கு வந்து சேராமை தெரியவந்தது.

இதனை அடுத்து பிரஸ்தாப வயோதிபர் காணாமல் போனமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ரி, வ)

# சலன சித்திரம் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்

சலனசித்திரம் அமைப்பின் பிரதேச நிர்வாகிகள் சந்திப்பும், பிரதேச திரைக்கலைச் சங்கங்களின் ஒன்று கூடலும் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரியகுளம் அண்மையில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் சலனசித்திரம் அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் திரைக்கலைச் சமூகம் ஒன்றை உருவாக்குதல் தொடர்பாகவும் வேறு பலமுக்கிய விடயங்கள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது. சலனசித்திரம் உறுப்பினர்களும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் உருவாக்கப்பட்ட இலங்கை திரைக்கலைச் சங்க அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சலன சித்திரத்தின் ஊடகப் பிரிவினர் தெரிவித்தனர்.

# வர்த்தகர்களின் விபரங்கள் சேகரிக்கும் படையினர்

சங்கானை

சங்கானையில் உள்ள சில வர்த்தக நிலையங்களின் விபரங்களை இராணுவத்தினர் திரட்டிவருகின்றனர்.கடந்த புதன்கிழமை காலை சில வர்த்தக நிலையங்களுக்கு சென்ற படையினர் கடை உரிமையாளரின் பெயர் மற்றும் தொழில் புரிவோரின் எண்ணிக்கை, தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்ற விபரங்களை திரட்டி சென்றனர்.

இதனால் சங்கானை வர்த்தகர்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.


ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந்,
மீராஜஸ்மின்
நடித்த



மெர்குரிப்பூக்கள்

பு. நேரம் : 10.30,2.00, 6.00,9.00

நிறைஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், சிபிராஜ், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த

கோவை பிறதேர்ஸ்

கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்

இன்றுமுதல்-
விஷால், மீரா ஜஸ்மின்
நடித்த

சண்டைக் கோழி

கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்



புரட்சிக்
கலைஞர்
விஜயகாந்த்
அஷிமா
மற்றும்
பலர்
நடித்த

சுதேசி

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

காட்சி:10.30, 1.30, 4.30, 7.30 (பு.நேரம்) விசேட காட்சி இரவு 10.00

துஷா பல் மூக்குக் கண்ணாடியகம்

நவீன தொழில்நுட்ப முறையில்

❖ இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள



❖ உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள

❖ மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்திக்கொள்ளவும்



THUSHA OPTICIANS

544, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

544, Hospital Road, Jaffna.

T.P : 021 - 222 3461, 0777 150032

[C/5175]


# இரண்டு கிராமங்களில் சுயதொழில் கடன்கள்

யாழ்ப்பாணம்

சர்வோதய பொருளதார வியாபார அபிவிருத்தி சேவைகள் கரண்டி லிமிட்டெட் அதன் யாழ்.மாவட்ட கிளையால் யாழ்.மாவட்டத்திலுள்ள சர்வோதய சிரமதான சங்கங்களின் ஊடாக கிராம மக்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்பு கடன் வசிதியை மேற்கொண்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டது. கடந்த திங்கட்கிழமை வடலியடைப்பு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும், சுழிபுரம் மேற்கு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளி தலா 30 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

இந்தத் திட்டம் தமது சுயதொழில் முயற்சிக்கு பெரிதும் பயனளிப்பதாக மக்கள் தெரிவித்தனர். மேலும் பல கிராமங்கள் இந்த கடனுதவித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளன எனவும் சர்வோதயம் அமைப்பினர் தெரிவித்தனர். (43)

# கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி

நல்லூர்

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுவிழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எஸ். தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் புனரமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஓய்வு பெற்ற யாழ்.மாவட்ட இணைப்பாளர் கமலா சிவசிதம்பரம் பிரதமவிருந்தினராகவும் யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (113)

# சர்வதேச மகளிர் தினமும் மாணவர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தினரால் அனைத்துலக பெண்கள் தினமும், 2005 ஆம் ஆண்டு 5 ஆம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சிக்கன கடன் உதவி கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவிக்கும் நிகழ்வும் இன்று காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சிக்கன கடன் உதவி கூட்டுறவுசங்க சமாச மகளிர்குழு தலைவி இ.இராசமணி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நீதிபதி இ:த.விக்னராஜா கலந்துகொள்வார்.

இதேவேளை சிறப்புரைகளும், கலைநிகழ்வுகளும், கணணிப்பயிற்சியில் சித்தியடைந்த கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (113)


DAIDO



CF 90C
4 Gear இன் சிறப்புகள்

எங்களிடம் தாராளமாக
DAIDO, YAMATO,
HONDA, YAMAHA,
BAJAJ, SUZUKI
மற்றும் எல்லா சீனா
தயாரிப்புகளுக்குப்
பொருந்தும் உதிரிப்பாகங்கள்
வேண்டியளவு கிடைக்கும்

52,900.00

Koyo
ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO



60B,

E.mail: zme@slt.lk

பதவி வெற்றிடம்

எங்களுடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

பிரபல வங்கியுடன் தொடர்புடைய காப்புறுதிக் கம்பனிக்கு தகுதி அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

வெற்றிடம்

காப்புறுதி ஆலோசகர்

தகைமைகள்

க.பொ.த.சா.தரத்தில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி. அத்துடன் மேலதிக தகைமைகள்.

குறிப்பு : ❖ பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ இணைந்து கொள்ளலாம்.

❖ திறமைக்கேற்ப பதவி உயர்வும், மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை 03.04.2006 ஆம் திகதிக்கு முன்னதாக

"நமது ஈழநாடு"
விளம்பர இல. 48,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பவும்.

[2224]

# தவறான ஊசியால் 10 மாதக் குழந்தை பலி

கொழும்பு —

தனியார் மருத்துவமனையில் ஏற்றப்பட்ட தவறான ஊசியால் 10 மாதக் குழந்தையொன்று மரணமடைந்தது.

நாகொலவைச் சேர்ந்த லக்சிதா பிரசாங்னி என்ற 10 மாதக் குழந்தை கடந்த புதன்கிழமையன்று காய்ச்சல் காரணமாகத் தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மருத்துவமனையில் மருத்துவர் இல்லாத நிலையில் மருத்துவர் தொழில் செய்யாத அவரது கணவர் ஊசி ஒன்றை குழந்தைக்குச் செலுத்தியுள்ளார்.

இதனால் குழந்தையின் உடல் நலம் மேலும் மோசமடைந்தது. அதன் பின்னர் மாத்தளை மருத்துவமனையில் அந்தக் குழந்தை அனுமதிக்கப்பட்டது.

இருப்பினும், சிகிச்சை பலனின்றி அந்தக் குழந்தை இறந்து விட்டது. இது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அன்ரன் பாலசிங்கம் கூறிய கருத்தில் ஆழமான உண்மையுள்ளது!

## திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு —

இனப்பிரச்சினை தீர்வுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ள கருத்தில் - ஆழமான உண்மை உள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ரொய்ட்டருக்கு வழங்கிய செவ்வி குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களை வாக்களிக்க விடாது செய்துவிட்டு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து செயற்பட வேண்டுமென கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இப்போது கூறுவது கவலைக்குரிய விடயம்.

இருந்த போதிலும் அவரின் கருத்தில் உண்மையுள்ளது. தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகத் தீர்வு காண்பதற்கு அரசு எதிர்க் கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.

தேசிய வாதக்கொள்கையுடன் செயற்படுவதாகக் கூறிக்கொண்டு இனவாதத்துடன் செயற்படும் ஜே.வி.பியினரதும், ஜாதிக ஹெல உறுமயவினதும் இணக்கப்பாட்டுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அந்த முயற்சி கானல் நீரேயாகும்.

ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்ற யதார்த்தத்தை மகிந்த ஜனாதிபதியானவுடனேயே உணர்ந்துகொண்டார்.

இந்தக் காலத்திலே அன்ரன் பாலசிங்கமும் அதற்கு ஏற்றால்போல் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அன்ரன் பாலசிங்கத்தின் கருத்துக்களுடன் முழுமையாக இணங்க முடியாதாயினும், சில விடயங்கள் சரியானதாகவேயுள்ளன.

தேசிய. அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக ஜனாதிபதி இதுவரை எந்த அழைப்பையும் விடுக்கவில்லை. அவ்வாறானதொரு அழைப்பு வந்தால், நிச்சயமாக நாம் பேச்சுக்களை நடத்தி ஒரு முடிவை எட்டுவோம்.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலம் நிரந்தரத் தீர்வு காணலாம் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு தற்போது ஜனாதிபதி மகிந்த வந்துள்ளார்.

எனவே, சமாதானத்துக்காக எத்தகைய உதவிகளையும் செய்ய நாம் தயாராகவேயுள்ளோம். ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட்டு நாட்டைப்பிரிக்காத அதிகாரப்பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்ட இந்த நாட்டில், நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த நாம் தயாராகவேயுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் எதிர்காலம் ஜே.வி.பி கையில் இருப்பதாக அந்தக் கட்சி கூறுவதற்காக அரசாங்கம் வெட்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

இது குறித்து ஊடகவியலாளர் களிடம் அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

ஜே.வி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க அண்மையில் மகிந்த ராஜபக்ஷவை ஜே.வி.பிதான் வெளியேற்றும் என்று கூறினார்.

இத்தகைய கருத்துக்களால் அரசாங்கம் வெட்கப்படவேண்டும். அரசாங்கத்தின் எதிர்காலம் ஜே.வி.பியின் கையில் இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

நோர்வே - அனுசரணையாளராக தொடர்ந்து நீடிக்கும் என்று அரசாங்கத்தின் மூத்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அறிவித்திருக்கின்ற போதும், ஜே.வி.பி யும் ஜாதிக ஹெல உறுமயவும் நோர்வேயை வெளியேற்றுவதில் முனைப்புடன் உள்ளனர்.

இத்தகைய தேசப்பற்று முழக்கங்களை எழுப்புவதன் மூலம் தனது வாக்கு வங்கியைத் தக்கவைத்துக் கொள்ள ஜே.வி.பி உள்ளிட்ட கட்சிகள் திட்டமிடுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளருக்கு வசதிகள்; அமைச்சரவை அங்கீகாரம்!

கொழும்பு —

ஊடகவியலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு வசதிகளை வழங்கும் முறையொன்றை ஆரம்பிக்க - அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

இதன்மூலம் ஓய்வூதியம் அல்லது வேறு வசதிகள் கிடைக்குமென அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த வசதி வாய்ப்புக்களை உள்ளடக்கிய சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை, பாடசாலை பாடநூல்கள் அச்சிடும் பணிகள் மீண்டும் அரச அச்சகத்துக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்த அவர் - கடந்த காலங்களில் தனியாருக்கு அச்சிடும் பணிகள் வழங்கப்பட்டதால் பிரச்சினைகள் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், அரச மற்றும் தனியார் இடங்களில் நுளம்புகள் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்குமானால், 25 ஆயிரம் ரூபா வரை அபராதம் விதிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்தார். (01)

# சுனாமி எச்சரிக்கை கருவி விரைவில் இந்து சமுத்திரத்தில்!


கொழும்பு —

சுனாமி அபாய அறிவிப்பு கட்டமைப்பு அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் இந்து சமுத்திரத்தில் நிறுவப்படவிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலக வளிமண்டலவியல் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய அந்தத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லலித் சந்திரபால இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நவீன சாதனங்களுடன் அமைக்கவுள்ள உத்தேச சுனாமி அபாய அறிவிப்புக் கட்டமைப்பின் மூலம் சுனாமி போன்ற கடல் அனர்த்தங்கள் ஏற்படும் முன்னர் அது குறித்து முன்கூட்டியே அபாய அறிவிப்பு விடக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (01)

# வருமான திணைக்களத்தின் மோசடி விசாரணைகளை துரிதமாக்க உத்தரவு



கொழும்பு —

தேசிய வருமானவரித் திணைக்கத்தில் நடந்துள்ள நிதி மோசடி சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துமாறு - பொலிஸ் மா அதிபருக்கு - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

தேசிய வருமானவரித் திணைக்களத்தில் 357 கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒருவருட காலத்துக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

மகிந்தவின் ஆலோசனைக்கமைய இந்த விசாரணைகள் விரைவுபடுத்தப்படவுள்ளன.

இதன்படி சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் தகவல்கள் பொலிஸாரால் கண்டறியப்பட்டுள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்தார்.

இதனிடையே அரச நிறுவனங்களில் நடக்கும் ஊழல் மோசடிகள் குறித்து ஆராய்வதற்காகப் பொலிஸ் திணைக்களத்தின் கீழ் சிறப்புப் பிரிவைத் தொடங்கவும், பொலிஸ்மா அதிபருக்கு - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய கடந்த புதன்கிழமை முதல் பொலிஸ்மா அதிபரின் கீழ் இந்தப் பிரிவு இயங்கத் தொடங்கியது.

இதற்காகப் பொலிஸ் திணைக்களத்தின் நேர்மையான மற்றும் திறமையான அதிகாரிகளைக் கொண்ட குழுவும் நியமிக்கப்படவுள்ளதாகச் சந்திரா பெர்னாண்டோ கூறினார்.

எந்த அரச நிறுவனங்களிலாவது ஊழல் மோசடிகள் நடந்தால், அது பற்றி உண்மை நிலையைத் தனக்கு அறிவிக்குமாறு பொதுமக்களைச் சந்திரா பெர்னாண்டோ கேட்டுள்ளார்.

# நிவாரண உதவிகளுக்கு என்ன நடந்தது ஆராய்வதற்கு மத்திய வங்கி தீர்மானம்

கொழும்பு —

சுனாமியின் பின்னர் இலங்கைக்குக் கிடைத்த கோடிக்கணக்கான டொலர்கள் பெறுமதி வாய்ந்த நிவாரண உதவிகளுக்கு என்ன நடந்தது என்பது குறித்து ஆராய, இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதம் வரை 4 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி நிவாரணமாகக் கிடைத்துள்ளது.

இவற்றில் 73 சதவீதம் இலங்கையில் செயற்படும் 30 அரச சார்பற்ற நிறுவனங்களுக்குக் கிடைத்துள்ளன.

இந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்த நிதியிலிருந்து, 85 சதவீதத்தை நிவாரணப் பணிகளுக்காகப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி எப்படிச் செலவிடப்பட்டுள்ளது என்பது குறித்து அறிவது கடினமான விடயம் எனவும், அரச சார்பற்ற நிறுவனங்கள், சுயாதீனமாக இயங்குவதே இதற்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (01)



# சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக சர்வதேச சமூகத்திடம் முறையீடு



## மனோ கணேசன் அறிவிப்பு

கொழும்பு —

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருக்கும் 40 ஆயிரம் படையினரின் சவப்பெட்டிகள் கொழும்புக்கு வந்தால், கொழும்பிலுள்ள 4 இலட்சம் தமிழர்களைச் சவப்பெட்டிகளில் அனுப்புவோம் என - ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளரான சம்பிக்க ரணவக்க எச்சரித்தமை குறித்து, இந்தியா மற்றும் இணைத்தலைமை நாடுகளிடம் முறையிடவுள்ளதாக மேல் மாகாண மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

சம்பிக்க ரணவக்கவினது எச்சரிக்கை தொடர்பாக வெளிநாட்டு ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

சம்பிக்க ரணவக்கவின் கூற்றுத் தெற்கில் வாழும் மக்களை கொலை அச்சுறுத்தல்களுக்குள் தள்ளியுள்ளது. இது குறித்துச் சர்வதேச சமூகங்களின் பிரதிநிதியையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்தார். (01)

# சட்டவிரோத மின்சாரம் பெறுவோரை கைது செய்வதற்கு நடவடிக்கை

கொழும்பு —

சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறும் நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மின்சக்தி எரிசக்தி அமைச்சு தீவிரப்படுத்தியுள்ளது.

சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்படுவதன் காரணமாக வருடம் ஒன்றுக்கு 100 மில்லியன் ரூபாவுக்கு மேல் மின்சார சபைக்கு நட்டம் ஏற்படுவதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் ஆலோசனைக்கு அமைய கடந்த மூன்று மாதங்களில் நடத்தப்பட்ட திடீர் சோதனைகளின் போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு 20 மில்லியன் ரூபாவுக்கு மேல் அபராதமாக வசூலிக்கப்பட்டது.

கொழும்பு, கலேவெல, தம்புள்ள, லக்கல, ஹொரண, இங்கிரிய, பண்டாரகம, அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களிலேயே திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமாக மின்சாரத்தை பெறும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படவுள்ளதாகவும் எரிசக்தி மின்சக்தி அமைச்சு கூறியுள்ளது. (01)

# கிராமத்தவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு —

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு விசேட செயற்திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவிருப்பதாகத் தபால் தொலைத்தொடர்பு மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண தெரிவித்தார்.

கிராமங்களில் வாழும் வறிய மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கு அடிப் படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், வீடுகளை அமைத்துக்கொடுத்தல் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்குச் சுயதொழிலை மேற்கொள்வதற்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றி பெற்றது பங்களாதேஷ்



பதுல்லா —

பங்களாதேஷ் - கென்ய அணிகளுக்கிடையே நேற்று பதுல்லாவில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டியில் - பங்களாதேஷ் அணி 20 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரை 3:0 என்ற அடிப்படையில் முழுமையாகக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணியின் ஜாவிட் ஓமருடன், நபீஸ் ஆரம்ப ஆட்டக்காரராகக் களமிறங்கினார். ஆனால், ஸ்கோர் 8ஐத் தொட்டபோது - ஜாவிட் ஓமர், ஒடோயோ வீசிய பந்தை ஒபுயாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அப்ரப் அகமட் களமிறங்கினார். அவர்கள் இருவரும் ஓட்டங்களைக் குவித்தவேளை, 5 பவுண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த அகமட் - ஒன்கொண்டோ வீசய பந்தை மொடியீடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து களமிறங்கிய மொகமட் அஸ்ரபுல் 3, ஹபிபுல் பசார் ஓட்டமெதையும் பெறாமல் ஒன்கொண்டோவின் பந்துவீச்சில் மிர்ஷாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ரபீக் நபீஸுடன் இணைந்துகொண்டார். ஆனால், சிறிதுநேரம் இணைந்து ஆடிய அவர்களில் நபீஸ் - 10 பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களைப் பெற்று ரிக்கலோ வீசிய பந்தை ஒபுயாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ரபீக்குடன், கபாலி ஜோடி சேர்ந்தார். அந்தவேளை, ரபீக் 4 பவுண்டரிகள், 1சிக்ஸருடன் 33 ஓட்டங்களைப் பெற்று கமாண்டே வீசிய பந்தில் போல்டானார்.

அவரையடுத்து கபாலியுடன், காலித் மசூத் இணைந்து ஆடினார். இருவரும் சேர்ந்து ஸ்கோரை உயர்த்தியவேளை, 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த மசூத் - ஒடோயோ வீசிய பந்தை ஒபுயாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மொட்ராசா 2 ஓட்டங்களுடனும், மசூத் 55 ஓட்டங்களுடனும் ரிக்கலோவின் பந்தில் ஆட்டமிழந்தனர்.

இறுதியாக இணைந்த ரசாக்- ரசல் ஜோடியில் ரசல் ஓட்டமெதையும் பெறாமல் ரன் அவுட்டானதால், பங்களாதேஷ் அணி 45.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. ஆடுகளத்தில் ரசாக் ஓட்டமெதையும் பெறாமல் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஒன்கொண்டோ, ரிக்கலோ இருவரும் தலா 3, ஒடோயோ 2, கமாண்டே 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 232 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் கென்ய அணி களமிறங்கியது. ஆரம்ப ஆட்டக்காரர்களாக ஓரினோவும், ஒபுயாவும் களமிறங்கினர்.

ஸ்கோர் 7ஐத் தொட்டபோது - 1 ஓட்டத்தை மட்டும் பெற்றிருந்த ஓரினோ, மொட்ராசாவின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழுந்தார்.

அடுத்து மொடி களமிறங்க, 13



ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த ஒபுயாவும் மொட்ராசா வீசிய பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து மொடியுடன், ரிக்கலோ ஜோடி சேர்ந்தார். ஆனால், ரிக்கலோ 10 ஓட்டங்களை மட்டும் பெற்று - ரசாக் வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


தொடர்ந்து ஒடோயோ களமிறங்கினார். ஆனால், 6 பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த மொடி, மொகமட் ரபீக் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் ஒபுயா களமிறங்கினார். அந்தவேளை, 9 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த ஒடோயோ, ரபீக் வீசிய பந்தை மொட்ராசாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து மிர்ஷா களம் புகுந்தார். இருவரும் இணைந்து சிறப்பாக ஆடியவேளை, 5 பவுண்டரிகள் அடங்கலாக 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஒபுயா ரபீக் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக களமிறங்கிய ஒன்கொண்டோ அதிரடியாக ஆடினார். அவர் 17 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1சிக்ஸரை விளாசி 27 ஓட்டங்களை எடுக்க, ரபீக் அவரையும் விட்டுவைக்கவில்லை.

தொடர்ந்து கமாண்டே 1, பட்டேல் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழக்க கென்ய அணி 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால், பங்களாதேஷ் 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.



இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 3:0 என்ற அடிப்படையில் முழுமையாகக் கைப்பற்றியது.

ஆடுகளத்தில் ஓட்டமெதையும் பெறாத சுஜி இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ரபீக் 5, மொட்ராசா 3, ரசாக் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

## விளையாட்டு

## கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு போட்டி முடிவுகள்

வடமராட்சி —

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பொது விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் ஆண்களுக்கான எல்லே போட்டியில் முதலாமிடத்தை பொமேர்ஸ் விளையாட்டுக் கழகமும், இரண்டாமிடத்தை கரவெட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும், பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை மனோகரா விளையாட்டுக் கழகமும் , இரண்டாமிடத்தைப் பொமேர்ஸ் அணியும் பெற்றன.

ஆண்களுக்கான கபடிப் போட்டியில் முதலாமிடத்தை கலைமதி விளையாட்டுக் கழகமும், இரண்டாமிடத்தை பொமேர்ஸ் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பொமேர்ஸ் அணியும் இரண்டாமிடத்தை யங்கம்பன்ஸ் அணியும் பெற்றன.

கரப்பந்தில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை சிவகுமாரன் விளையாட்டுக் கழகமும், இரண்டாமிடத்தை குணசேகரா விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை சிவகுமாரன் விளையாட் டுக் கழகமும், இரண்டாமிடத்தை பொமேர்ஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றன.

கிரிக்கெட் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை வெக்டர் கழகமும், இரண்டாமிடத்தை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை மனோகரா அணியும், இரண்டாமிடத்தைபொமேர்ஸ் அணியும் பெற்றன.

உதைபந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் முதலாமிடதத்தை மனோகரா விளையாட்டுக் கழகமும், இரண்டாமிடத்தை பொமேர்ஸ் அணியும் பெற்றன.

வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தை பொமேர்ஸ் அணியும்,இரண்டாமிடத்தை மனோகரா அணியும் பெற்றது. (12)

## யாழ்.கோட்ட மட்டத்திலான வலைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம் —

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட யாழ்.கோட்ட பாடசாலை அணிகளிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியின் மூன்று பிரிவுகளுக்குமான முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியானது கடந்த செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் வேம்படி உயர்தர பாடசாலை மைதானத்தில் இரு ஆடுகளங்களில் நடைபெற்று வந்தது. இதன் முடிவுகள் வருமாறு -

15 வயதுப் பிரிவு -

1ஆம் இடம் : திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயம், 2ஆம் இடம் : கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம், 3ஆம் இடம் : வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

17 வயதுப் பிரிவு -

1ஆம் இடம் : வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, 2ஆம் இடம் : திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயம், 3ஆம் இடம் : சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

19 வயதுப் பிரிவு -

1ஆம் இடம் : சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் : திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயம், 3ஆம் இடம் : வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## விண்ணப்பங்களை பெறாதோர் தொடர்புகொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம் —

தமிழ் செய்தி தகவல் மையத்தினால் நடத்தப்படவுள்ள பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

எனவே இதுவரை விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைகளின் அதிபர்கள் தமிழ் செய்தி தகவல் மையத்தின் தொலைபேசி எண் : 0212229545 மூலமாகவோ அல்லது இல.180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சதுரங்கப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இந்த மாதம் 29ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி பதக்க பட்டியல்

அவுஸ்ரேலியா —

அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் பதக்க பட்டியல் வெளியாகியுள்ளது.

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அவுஸ்ரேலியா | 72 | 60 | 57 | 189 |
| இங்கிலாந்து | 24 | 35 | 28- | 87 |
| கனடா | 20 | 26 | 25 | 71 |
| இந்தியா | 20 | 13 | 10 | 43 |
| தென்னாபிரிக்கா | 11 | 8 | 13 | 32 |
| ஸ்கொட்லன்ட் | 10 | 7 | 10 | 27 |
| ஜமைக்கா | 8 | 4 | 7 | 19 |
| கென்யா | 6 | 4 | 7 | 17 |
| நியூஸிலாந்து | 4 | 10 | 13 | 27 |
| மலேசியா | 4 | 6 | 7 | 17 |
| வேல்ஸ் | 3 | 4 | 10 | 17 |
| நைஜீரியா | 3 | 4 | 5 | 12 |
| சிங்கப்பூர் | 3 | 3 | 4 | 10 |
| சைபிரஸ் | 2 | 1 | 2 | 5 |
| கானா | 2 | 0 | 1 | 3 |
| பப்புவா நியூகினியா | 1 | 1 | 0 | 2 |
| பாகிஸ்தான் | 1 | 0 | 1 | 2 |
| உகண்டா | 1 | 0 | 1 | 2 |
| இலங்கை | 1 | 0 | 0 | 1 |
| தன்சானியா | 1 | 0 | 0 | 1 |

## ஆசிரியர் கலாசாலை மட்ட கிரிக்கெட்

# கடும் போராட்டத்தின் பின் பலாலி கலாசாலை வெற்றி

யாழ்ப்பாணம் —

ஆசிரியர் கலாசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக நேற்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற 15 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் ஆட்டத்தில் - பலாலி ஆசிரியர் கலாசலைக்கும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்குமிடையிலான ஆட்டத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலை அணி 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பலாலி ஆசிரியர் கலாசாலை அணி 12.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சசிகரன் 2 சிக்ஸர்கள் உட்பட 13, சாரங்கன் 2 சிக்ஸர்கள் உட்பட 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்ரன் சேவியர் 3, றொபின்சன், அஜித் ஆகியோர் தலா 2, சிவசங்கர், சிறி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

61 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற மிக இலகுவான இலக்குடன் களமிறங்கிய கோப்பாய் கலாசாலை அணியினருக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது.

சசிகரன் வீசிய முதலாவது ஓவரின் முதற் பந்திலேயே - அன்ரன் சேவியர் சுரேஷ்குமாரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். 13 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றிருந்தது கோப்பாய் கலாசாலை அணி.

மீதமுள்ள 2 ஓவர்களில் 9 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் - சுரேஸ்குமார் வீசிய பந்தை ஜெயசுதன் சிக்ஸராக மாற்றினார்.

அடுத்த பந்திலேயே ஜெயசுதன் ஆட்டமிழந்து வெளியேற, போட்டியின் போக்கு மேலும் விறுவிறுப்பானது.

இறுதியாக களமிறங்கிய ஜெயபிரதாபன் ஓட்டமெதையும் பெறாமலேயே சுரேஷ்குமாரின் பந்தில் ஆட்டமிழந்ததால், அந்த அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் பலாலி ஆசிரியர் கலாசாலை 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் சுரேஷ்குமார், விமலன் ஆகியோர் தலா 3, ராஜமனோகரன் 2, சசிகரன், தேவலிங்கம் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (12)


# எங்களின் கைவண்ணம்



றொ.அன்ரன்,
மூன்றாம் குறுக்குத்தெரு
பருத்தித்துறை.



டே.டிசேக்
தரம் - 09
யா/கலட்டி றோ.க.த.
ஆண்கள் பாடசாலை.



சி.லக்சினி
தரம் - 6
யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க.
பாடசாலை.



வி.றேகன்
தரம் - 10
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்.



வி.சோபியா
தரம் - 4
யா/சென். தோமஸ் பாடசாலை

**வெற்றி என்பது கடையில் வாங்கக்கூடிய பண்டமல்ல. நாமே முயன்று செயற்பட்டு அடைய வேண்டிய பயண இலக்கு. விரும்பி உழைத்தால் மட்டுமே கஷ்டப்படாமல் வாழலாம்.**






பாடி ஆடித் தாளம்போட
மேடை ஏறி வந்தோம்
பாடலோடு கூடி இங்கு
சேதி ஒன்று சொல்வோம்

அடக்கி நாளும் அடிகள் மூலம்
முடக்கி எம்மை வளர்த்தீர்
துடுக்கடக்கி துணிவழித்து
ஆளுமையைச் சிதைத்தீர்.

வட்டநிலவில் ஔவைக்கிழவி
வடைசுடுறாள் என்று
கட்டுக் கதைகள் கூறி எங்கள்
கற்பனையை அழித்தீர்.

பேய் பிசாசு பூதம் என்ற
பேய்க்கதைகள் கூறி
நோய்பிடித்த பிள்ளைகளாய்
நாம் இருக்க வைத்தீர்.

போதுமிந்த அவலவாழ்வு
மேலும் வேண்டாம் என்று
ஊதும் குழல் கொண்டு நாங்கள்
சேதி சொல்ல வந்தோம்.

எறும்பு போல சுறுசுறுப்பாய்
என்றும் வாழ வேண்டி
அரும்புகள் நாம் ஒன்று கூடி
அணி திரண்டு வந்தோம்.

**சந்துரு மாமா**

# சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**பாகம் - 1**

**உறுப்புரை -3**

3.1 சிறுவர்கள் சார்பாக தனியார் சமூக நல அமைப்புக்கள் நீதிமன்றங்கள் நிர்வாக அதிகார சபைகள் அல்லது சட்டவாக்கக் குழுக்கள் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளிலும் பிள்ளையின் அதியுயர் நலனே முழுமுதற் கவனம் பெறுதல் வேண்டும்.

3.2 அரச தரப்பினர் பிள்ளையின் நல்வாழ்வுக்கு அவசியமான பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதிப் படுத்துவதற்கு பொறுப்பேற்க வேண்டும். இது விடயத்தில் பிள்ளையின் பெற்றோர், சட்டப்படியான பாதுகாவலர் அல்லது சட்டப்படி பொறுப்புடைய தனிநபர்களின் உரிமைகளும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

3.3 சிறுவர் பராமரிப்பு அல்லது பாதுகாப்புக்கு பொறுப்பாயிருக்கும் நிறுவனங்கள் சேவைகள் வசதிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை, தகைமை மற்றும் திறமையான கண்காணிப்பு விடயங்களில் அதிலும் குறிப்பாக பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் தகுதி வாய்ந்த அதிகாரிகள் வரையறுத்துள்ள விதிமுறைகளுக்கு அமைய ஒழுகுவதை அரச தரப்பினர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(தொடரும் ....)

**ஆரோக்கியமுள்ள சிறுவர்களாக நீங்கள் வளர்வதே துருவனின் விருப்பம்**

# பொது அறிவுப் போட்டி

அன்பார்ந்த எமது மாணவர்களே! நீங்கள் தரம் 7 இற்கு உட்பட்ட வகுப்புக்களில் கல்வி கற்கின்றீர்களா? அப்படியாயின் நீங்கள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டு பெறுமதிமிக்க பரிசில்களைப் பெற்றுக் கொள்ள முடியும். கீழே பத்து வினாக்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவற்றுக்குரிய விடைகள் கடந்த இரு வாரங்கள் வெளிவந்த துருவன் மற்றும் கடந்தவார விளையாட்டு அரங்கம் ஆகிய இதழ்களிலேயே இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி, இந்த வினாக்களுக்குரிய சரியான விடைகளை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்பாக எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள். உங்கள் விடைகளுடன் 6 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, அதிபர்/ ஆசிரியரது உறுதிப்படுத்தலுடன் அனுப்பிவையுங்கள். உறுதிப்படுத்தலின்றி வரும் விடைகள் பரிசுக் குலுக்கலுக்கு சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது என்பதை கவலையோடு குறிப்பிட விரும்புகின்றோம். உங்கள் விடைகள் யாவும் வந்து சேரவேண்டிய முகவரி :

"துருவன் பொது அறிவுப் போட்டி"
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தெரிவு செய்யப்படும் முதல் மூன்று திறமைசாலிகளுக்கும் முறையே 300ரூபா, 200ரூபா, 100ரூபா பரிசுகள் வழங்கப்படும். பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளது விபரம் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நமது ஈழநாட்டில் வெளிவரும்.

# பொது அறிவுப் போட்டி - 4

01. திருக்குறளில் மொத்தம் எத்தனை குறள்கள் உள்ளன?
02. லேசர் கதிர்கள் மூலம் ஒரு குண்டூசியின் தலையில் எத்தனை துவாரங்கள் வரை போட முடியும்?
03. பூச்சியத்தைக் கணக்குகளில் பயன்படுத்தலாம் என்பதை முதன் முதலாகக் கூறியவர் யார்?
04. காலையில் ஒரு திசையிலும் மாலையில் ஒருதிசையிலும் பாயும் நதி எது?எங்குள்ளது?
05. அந்தாட்டிக்காவிலுள்ள பனிப்பாறைக்கு தமிழ் மகன் ஒருவரது பெயர் சூட்டப்பட்டுள்ளதல்லவா? அந்தப் பெயர் என்ன?
06. செவ்வாய்க் கோளின் சந்திரனின் பெயர் என்ன?
07. மலை உச்சியில் இருக்கும் போது எமது நிறை கூடுதலாகக் காணப்படுமா?
08. எந்த நாட்டில் கங்காருக்கள் அதிகமாக உள்ளன?
09. உலகத்தை உலுக்கிய ஒரு நாள் என்ற தலைப்புடனான விளையாட்டு அரங்கச் செய்தியில் இடம் பெற்றுள்ள அணிகள் இரண்டும் எந்த நாட்டைச் சேர்ந்தவை?
10. எழுக எழுக என்ற குறிப்புடன் பிரசுரிக்கப்பட்ட விளையாட்டு வீரரின் பெயர் என்ன?

## பொது அறிவுப் போட்டி – 1 விடைகள்

| | |
|---|---|
| 01. முதலை | 06. வான்மீகி இராமாயணம் |
| 02. பென்குயின் | 07. பாண்டிய மன்னர்களால் |
| 03.பொறாமைக்குப் பரிசு | 08.முரளிதரன் |
| 04.1959 | 09. ரொம்மூடி |
| 05. 1991 | 10. ஜோசப் கிருஸ்ணா |

# குறுக்கெழுத்துப் போட்டி

அன்பான மாணவர்களே! துருவன் உங்களுக்காக அறிமுகப்படுத்தும் போட்டி இது. இதில் பாடசாலை மாணவர்கள் அனைவரும் வகுப்புக் கட்டுப்பாடின்றிக் கலந்து கொள்ளலாம். கலந்து கொண்டு வெற்றிபெறும் முதல் மூன்று திறமை சாலிகளுக்கும் முறையே 500 ரூபா, 300 ரூபா, 200 ரூபா பரிசு வழங்கப்படும். உங்கள் விடைகளை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்பாக உங்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைப்பது பயனுடையதாக இருக்கும்.

உங்கள் விடைகள் யாவும் 6 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ள விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புவது அவசியமானதாகும். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

"துருவன் குறுக்கெழுத்துப் போட்டி"
நமது ஈழநாடு,
267 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளது விபரம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நமது ஈழநாட்டில் வெளிவரும்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கி 1 | 2 | | ■ | கு 3 | 4 |
| | 5 | ■ | அ 6 | | 7 |
| | ■ | து 8 | | ■ | ■ |
| த 9 | | ■ | | ■ | தே 10 |
| | ■ | 11 ப | 12 | ■ | |
| | ■ | 13 | 14 | ■ | |

**இடமிருந்து வலம்:**
01. இது காரணமாகவே எமக்கு நோய்த் தொற்று ஏற்படுவதாக வைத்தியர்கள் கூறுகிறார்கள்.
03. மேலைப்புமிக் கீழே வரு தலை இவ்வாறு குறிப்பிடுவர்.
05. தச்சர்களிடம் இருக்கும் தொழில் உபகரணங்களில் ஒன்று மாறியுள்ளது.
06. கூட்டம்,சோலை எனவும் பொருள்படும்.
08. கணவன் இறுதி எழுத்தை இழந்து நிற்கிறான்.
09. புள்ளி, பத்து என்றெல்லாம் பொருள் தரும்.
10. மருத்துவத் தேவைக்கு உதவும் ஒரு இயற்கை விளைபொருள் பூக்களே இதன் விளை நிலம். மாறியுள்ளது.
11. இது வந்திடப்பதும் பறக்கும் என்பார்கள்.
13. ஒருவகை மீன்.மாறியுள்ளது.

**மேலிருந்து கீழ்.**
01. தமிழரின் பண்டைய விளையாட்டுக்களில் ஒன்று.
02. வடிவு,அழகு எனவும் பொருள். இங்கு தலைகீழாயுள்ளது.
03. இடையனை இப்படியும் அழைப்பர்.
04. நீதி,செயல்,ஒழுக்கமுறை என்றெல்லாம் இதுபொருள் தரும். தலைகீழாக வந்துள்ளது.
06. நீரைத் தேக்கி வைக்க இது அவசியம்.
08. வடமராட்சிப் பகுதியிலுள்ள ஒரு கிராமம்.
10. அழகிய வாலுகைப் பெண்.
12. பழந்தல்,கல்வி கற்றல் எனவும் பொருள் தரும். தலைகீழாக உள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி – 1 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ந 1 | ஞ 2 | ■ | க 3 | வ 4 | லை 5 |
| வி 6 | கூ | ■ | 7 | கு | ■ |
| ல | ■ | ■ | 8 க | ■ | ■ |
| ம் | ■ | ■ | ம் 9 | வ 10 | த 11 |
| ■ | 12 ஆ | 13 ல் | ■ | 14 | ■ |
| உ 15 | ஞ | வி | ல் | ■ | ■ |



# மேலே செல்லக் காரணம்

தந்தையொருவர் தனது மகனை பட்டம் விடுவதற்காக கடற் கரைக்கு அழைத்துச் சென்றார். நேர்த்தியாகவும், அழகாகவும் செய்யப்பட்டிருந்த அந்தப் பட்டத்தில் நூலைக் கட்டி அதனை மேலே பறக்க விட ஆயத்தமானார். தந்தை பட்டத்தை மேலே ஏற்றுவதற்கு மகன் அவருக்கு துணையாக நின்று ஆவலோடு உதவினான். பட்டம் மெல்ல மெல்ல மேலே ஏறத் தொடங்கியது. சிறிது நேரத்தில் அது மிக மிக உயரத்தில் - மிகக் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. அது பறக்கும் அழகைக் கண்டு சிறுவன் பிரமித்துப் போய் நின்றான்.

அப்பா! இந்தப் பட்டம் இப்படி உயரப் பறப்பதற்கு காரணம் என்ன? என்று ஆர்வத்துடன் கேட்டான். அதற்கு தந்தை - இந்த நூல்தான் காரணம் என, தான் பிடித்து வைத்திருந்த நூலைக் காட்டினார். அதெப்படி? இந்த நூல்தானே பட்டத்தை மேலே இன்னும் உயரச் செல்ல விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறதல்லவா? என்று குறுக்குக் கேள்வி கேட்டான் சிறுவன். இதோ நடப்பதைப் பார் என்று கூறிய தந்தை - தன் சட்டைப் பையிலிருந்த பேனாக் கத்தியை எடுத்து பட்டத்தின் நூலை அறுத்து விட்டார். உறுதியாகப் பறந்து கொண்டிருந்த பட்டம், நூலை அறுத்ததும் சிறிது படபடத்து ஆடியது. சிறிது நேரத்தில் அது நிலை குலைந்து ஆடத் தொடங்கியது. இறுதியில் தலைகுப்புற வந்து எங்கோ தொலைவில் தரையில் வீழ்ந்தது. அதைக் கண்ட சிறுவன் ஐயோ! என்ற பட்டம் என அலறினான்.

மகனே இந்த நூல் அந்தப் பட்டத்தை மேலே செல்ல விடாது தடுத்துக் கொண்டிருப்பதுபோல் உனக்குத் தோன்றினாலும், உண்மையில் பட்டம் நிலைகுலையாமல், உறுதியாக மேலே பறப்பதற்கு அதுதான் காரணமாக இருந்திருக்கின்றது என்பது இப்போது புரிகின்றது அல்லவா? என்றார் தந்தை.

இந்த நூலைப் போல் தான் பெற்றோரின் கண்டிப்பும், கட்டுப்பாடும் பிள்ளைகளை முன்னேற விடாமல் தடுப்பது போல் தோன்றும். ஆனால் உண்மையில் அந்தக் கட்டுப்பாடுதான் அவர்கள் தீயவழியில் செல்லாது, அவர்களின் வாழ்க்கை முன்னேற்றப் பாதைக்குச் செல்வதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்றது என்று விளக்கம் கொடுத்தார்.

எனவே பிள்ளைகளே இந்தக் கதையில் இருந்து என்ன புரிகின்றது என்று விளங்குகின்றது அல்லவா?

சிறிஸ்கந்தராஜா அசோக்மாலா
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## எனது வீட்டுத் தோட்டம்

எனது வீட்டுத்தோட்டம் மிக அழகானது.
எனது வீட்டுத் தோட்டத்துக்கு நான் ஓய்வு நேரங்களில் நீர் ஊற்றுவேன்.
எனது வீட்டுத்தோட்டத்தில் பலவகையான மரக்கறிகள் இருக்கின்றன.
எனது வீட்டுத் தோட்டம் உணவு தருகின்றது.
எனது வீட்டுத் தோட்டத்தைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைவேன்.

சி.தர்சினி
தரம் 5



# பழமொழிகள்



1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகாது.
3. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
4. எறும்பு ஊரக் கல் குழியும்.
5. இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை.
6. எழுதா விதிக்கு அழுதால் தீருமோ.
7. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
8. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
9. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
10. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.

சு.வரோதயன்
தரம் - 7
யா/சந்திர மௌலீச வித்தியாலயம்

# நான் சென்ற கல்விச் சுற்றுலா



நான் அப்பாவுடன் கடந்த வாரம் ஒரு நாள் வீட்டிலிருந்து காலை ஆறு முப்பது மணிக்குப் பாடசாலை நோக்கிப் புறப்பட்டேன். பாடசாலை முன்னால் இரண்டு பேருந்துகள் நின்றன. முதல் பேருந்தில் ஐந்தாம் வகுப்புக்கு உட்பட்ட மாணவர்களும், இரண்டாவது பேருந்தில் ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களும் செல்ல ஆசிரியர்களால் ஆயத்தப் படுத்தப்பட்டோம்.

நாங்களும், ஆசிரியர்களும் ஏறிய சிறிது நேரத்தில் பேருந்துகள் புறப்பட்டன. பேருந்துகள் காங்கேசன்துறை வீதி வழியாகச் சென்றன. தெல்லிப்பளை என்ற இடத்தில் பேருந்தை மறித்த இராணுவத்தினர் ஆசிரியர்களிடம் ஏதோ விசாரித்தனர். பின்னர் எங்களைத் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர். நாம் முதலில் கீரிமலைக் கடலுக்குச் சென்றோம். கடலிலே ஒரு கப்பல் நிற்பதைக் கண்டோம். கடலைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. பின் நகுலேஸ்வரர் கோயிலுக்குச் சென்றோம். நகுலேஸ்வரக் கோயில் மிகவும் பழமையானது. நாங்கள் சிவலிங்கத்தை வழிபட்டோம்.அதன் பின் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்றோம். அங்கே முருகனை வழிபட்டோம்.அந்தக் கோயில் புனரமைக்கப்பட்டு வருவது எனக்குத் தெரிந்தது. பின்னர் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலுக்குச் சென்றோம். கோயிலைச் சுற்றி வழிபட்டோம். அந்தக் கோயில் கோபுரம் அழகாகவும், உயரமாகவும் இருந்தது. அங்கே நாங்கள் மர நிழலில் இருந்து இளைப்பாறினோம். அங்கிருந்து புறப்பட்டு மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்றோம். அது புதுவிதமாக இருந்தது. ஆஞ்சநேயரை நாம் வழிபட்டோம். அங்கிருந்து நிலாவரை கிணற்றைப் பார்க்கச் சென்றோம். அங்கு சொன்னது எனக்கு ஆச்சரியமளித்தது. ஏனெனில், அதில் எது போட்டாலும் கீரிமலைக் கடலை வந்தடையும் என்பதே எனக்கு ஆச்சரிய மளித்தது. பின்னர் செல்வச் சந்நிதி கோயிலுக்குச் சென்றோம். அங்கு முருகனை வழிபட்டோம். பின் கடலையும் பார்த்தோம். அதன்பின்னர் அன்னதானம் நடக்கும் இடத்துக்குச் சென்று அன்னதானத்தில் பங்கு கொண்டோம்.

அங்கிருந்து வல்லிபுர கோயிலுக்குச் சென்றோம். அங்கு இறைவனை வணங்கினோம். ஆசிரியர்கள் அர்ச்சனை செய்தனர்.

அடுத்து மணற்காட்டுக்குச் சென்றோம். மணற்காட்டில் இந்தோனே சியாவிலிருந்து வந்ததாகக் கூறப்படும் மரத்தைப் பார்த்தோம். பின்னர் மணலால் மூடப்பட்டிருந்த தேவாலயத்தைப் பார்த்தோம். நாம் நன்றாகக் களைத்துப் போனதால் சற்று ஓய்வெடுத்துக் கொண்டு அங்கிருந்து மீண்டும் புறப்பட்டு எமது பாடசாலையை மாலை ஏழு மணிபோல் வந்தடைந்தோம்.

அங்கே எனது அப்பாவுடன் பல பெற்றோர்கள் எங்களை எதிர்பார்த்தபடி இருந்தனர். மிகுந்த மகிழ்ச்சியும், களைப்புமாக நான் வீட்டை அடைந்தேன்.

ச.தனஞ்செயன் - தரம் - 5
யா/ இந்து ஆரம்ப பாடசாலை.

## பொது அறிவுப் போட்டி/குறுக்கெழுத்துப் போட்டி விண்ணப்பப் படிவம்

(பொருத்தமற்றதை வெட்டிவிடுக)

அலுவலக உபயோகம்.....

இல : 03

முழுப்பெயர் : ..............................................

பாடசாலை : ..............................................

கற்கும் தரம் : ..............................................

.................. ..............................
திகதி மாணவர் கையொப்பம்

அதிபர்/ ஆசிரியரின் சான்று :

இந்த மாணவர் எமது பாடசாலையில் தரம் ...................... கற்கின்றார் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

....................................
ஒப்பம் (பதவி முத்திரை)

# தகவல் பெட்டகம்



- உலகிலேயே மிகப்பெரிய வயலினும், மிகச்சிறிய வயலினும் ஜேர்மனியிலுள்ள "மார்க்னுகிர்சன்" அருங்காட்சியகத்தில் இருக்கிறது. பெரிய வயலின் 6 அடி 8 அங்குல உயரமும், மிகச்சிறிய வயலின் வெறும் மூன்று அங்குல உயரமும் உடையது.

- உலகின் பல்வேறு நாடுகளிலும் சுமார் 1500 எரிமலைகள் உள்ளுக்குள்ளேயே தீப்பிழம்பாக எந்தநேரமும் வெடிக்கத் தயார் நிலையில் உள்ளன. இதேபோல வருடத்தில் சுமார் 800 நில நடுக்கங்கள் உலகம் முழுவதும் இடம் பெறுகிறது.

- 1854 ஆம் ஆண்டில் இஸாக் சிங்கர் என்பவர்தான் தையல் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். இன்றும் அவர் பெயரிலேயே உலகெங்கிலும் தையல் இயந்திரங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் இருக்கின்றன.

## இலங்கையிலுள்ள நீர்வீழ்ச்சிகளும் அவற்றின் உயரங்களும்

| | | | |
|---|---|---|---|
| பம்பரக்கந்த | 263 M | றத்னா | 109 M |
| தியலும | 220 M | கல்தொல | 100 M |
| குருந்து ஓயா | 206 M | நெக்கவிட்ட | 100 M |
| கந்தப்பன | 200 M | கறண்தி | 100 M |
| ஒலு | 200 M | பந்துலு ஓயா | 100 M |
| மாப்பானை | 148 M | அபர்டீன் | 98 M |
| லக்ஷபான | 129 M | தேவன் | 97 M |
| மகாகந்துர | 120 M | சென்ட் கிளையர்ஸ் | 80 M |
| கிரிந்த | 110 M | துனகிந்த | 63 M |
| றம்பொட | 109 M | அலுபொல | 60 M |

# ஓ... உண்மையாகவா?



## ஆம்... ஆம்... உண்மையாகவே...!

■ எங்கே உங்களால் கண்களைத் திறந்து கொண்டு தும்ம முடியுமா என்று முயற்சி செய்து பாருங்கள். ம்... ஹூம்.... முடியவே முடியாது.

■ டொல்பினால் மணிக்கு 35 கிலோ மீற்றர் வேகத்தில் நீந்த முடியும்.

■ W.W.W என அழைக்கப்படும் சர்வதேச வலைத்தள அமைப்பை உருவாக்கியவர்கள் யார் தெரியுமா? சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த டிம்பெர்ஷர் என்பவரும் அவருடன் வேலை செய்தவர்களும்தான்.

■ ஒலிம்பிக் கொடியிலுள்ள ஐந்து வளையங்களும் என்ன நிறங்களைக் கொண்டவை தெரியுமா?
சிவப்பு, கறுப்பு, நீலம், பச்சை, மஞ்சள் ஆகிய ஐந்து நிறங்களைக் கொண்டவையே அவை. இந்த ஐந்து நிறங்களிலும் ஏதாவது ஒரு நிறம் - உலகில் உள்ள எந்த ஒரு நாட்டுக் கொடியிலாவது இருக்கும்.

■ கறையான்கள் புற்றுக்களை அமைக்கும் போது ஒரு நகரத்தை நிர்மாணிக்கும் திட்ட அமைப்புடனேயே அவற்றைக் கட்டுகின்றனவாம். அதிலும் விஷேசம் என்னவென்றால் கறையான்கள் தமது உணவுக்குத் தேவையான காளான்களை வளர்க்க தோட்டப் பகுதிகளையும் அமைத்து விடுகின்றனவாம்.

■ மூங்கில் மரங்கள் ஒரு நாளில் மட்டும் 3.8 அங்குலம் வளருகிறது.

■ வீட்டு ஈக்களின் தலைக்கு இரு பக்கமும் பெரியதாக கருமையாகக் காணப்படுகின்றனவே அவை என்ன தெரியுமா?
அவைதான் ஈயின் கூட்டுக் கண்கள். ஒவ்வொரு கூட்டுக் கண்ணிலும் 4000 சிறிய கண்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக இருக்கின்றன. தனித்தனியாக இருக்கும் அந்தக் கண்கள் நேராக மட்டுமே பார்க்க முடியுமாம். எனினும், எல்லாம் கூட்டாகச் சேரும்போது எல்லாப் பக்கமும் சுற்றிப் பார்க்க முடியுமாம்.

■ உலகம் பூராகவும் ஒரு வருட காலப்பகுதியில் கடலில் இருந்து பிடிக்கும் மீனின் அளவை விட மூன்று மடங்கு அதிகமான குப்பைகளைக் கடலில் கொட்டுகின்றோம்.


■ ஒன்று முதல், தொள்ளாயிரத்து தொண்ணூற்றி ஒன்பது வரை ஆங்கிலத்தில் எழுதிப் பாருங்கள். A என்கிற எழுத்து ஒரு தடவை கூட வராது.

■ மேற்குலக நாடுகளில் 27 வீதமான உணவுப் பொருட்கள் குப்பையில் கொட்டப்படுகின்றன.

■ உலகில் உள்ள மக்கள் தொகையைவிட அதிக அளவில் நம் வாயில் பக்டீரியாக்கள் இருக்கின்றனவாம்.

இங்கே மடிக்கவும்

# மூன்று நண்பர்கள்




பகுதி -04

எஸ்.விஜி

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மாணவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கணிப்பீட்டு அறிக்கைகளை மாறிமாறிப் பார்த்து தமக்குள் விமர்சித்துக்கொண்டிருக்கின்றனர். நாதன் குமாரினதும், உதயனினதும் கணிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்று மூன்றையும் ஒப்பிட்டுப் பார்க்கிறான்.

"டேய் நாதன், அத மூடிவை... பெல் அடிக்கப் போகுது. அதுகளப் பிறகு பார்ப்போம். இப்ப இஞ்ச கவனி, நாங்க சொன்ன மாதிரி, வீட்டில போன உடனே வாய் திறக்காத. நாங்க சரியா நாலு மணிக்கெல்லாம் உங்கட வீட்ட வருவம். என்ன?"

"ஓம் மச்சான் ஓம்..ஓம்.. நீங்க மறந்திடாதீங்க. மற்றது பிந்திடாதீங்க. நான் வீட்ட வாயே திறக்க மாட்டன் . நீங்க என்ர வீட்ட வந்த பிறகுதான் நான் இவனோட உன்ர வீட்ட வருவன். சரிதானே?" நாதன் கூறி முடிக்கவும், பாடசாலை விடும் மணி ஒலிக்கவும் சரியாக இருக்கிறது. பாடசாலைக் கீதத்துக்காக எல்லோருமே எழுந்து நிற்கின்றனர். மூவரும் எழுந்து நின்றபடி பாடசாலைக் கீதத்தை மெதுவாக உச்சரிக்கின்றனர்.

எனினும் அவர்களது மனங்களில் கந்தளாய்க்கு போவது பற்றிய சிந்தனையே மேலோங்கி நிற்கிறது.

கூறியதைப் போலவே பாடசாலை விட்டு வந்து சாப்பிட்ட உடனேயே உதயன் குமாரினது வீட்டுக்கு வந்து விட்டான். தனது மதிய உணவை முடித்துக் கொண்ட பின்னர், முன் விறாந்தையில் இருந்து அன்றைய தினசரிப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த குமார், உதயன் கேற்றைத் திறந்து விட்டு வருவதைக் கண்டதும் பத்திரிகையை மடித்து வைத்துவிட்டு கேற்றடிக்கே சென்று உதயனை வரவேற்றான்.

"என்ன உதயன். நாதன் வீட்ட போகத்தானே....?"

"நான் அதுக்காகத்தான் வாறன். நீ ஏன் இன்னும் வெளிக்கிடல்ல..." உதயன் சற்று யோசனையுடன் கேட்டான்.

"நான் இந்தா ரெடி. சேர்ட்டப் போட்டா ஐயா ஓ.கே..." நீ வந்த பிறகு அம்மாட்ட கேட்டுட்டு சேர்ட்டப் போடுவம் எண்டு இருந்தனான்....இப்ப என்ன.... இந்தா இதில இருந்து பேப்பரப் பார்.. ஒரு ரெண்டு நிமிஷத்தில வாறன்..."

குமார் தினசரியை எடுத்து உதயனது கைகளில் கொடுத்துவிட்டு வீட்டினுள் சென்று மறைகின்றான். உதயன் விறாந்தையில் இருந்த கதிரைகளில் ஒன்றில் வசதியாக அமர்ந்து கொள்கின்றான். அவன் இருந்த கதிரைக்கு நேரே சுவரில், அழகிய நல்ல பெரிய படமாக கீதாசாரம் தூக்கப்பட்டிருக்கிறது. அருச்சுனன் முட்டி போட்டு இருந்து, கும்பிட்டபடி கண்ணனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். கண்ணன் அழகிய திருக்கோலத்தில் அவன் முன் நிற்கின்றான். கண்ணனது இடதுகை அவனது நெஞ்சைத் தொட்டபடியும், வலது கை எங்கோ ஒரு திசையைக் காட்டியபடி நீண்டும் இருக்கிறது.

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அது நன்றாகவே நடக்கும்..."

உதயன் கீதாசாரத்தை மெல்ல வாசிக்கின்றான்.

"அம்மா... நான் உதயனோட ஒருக்கா நாதன் வீட்ட போயிட்டு வரட்டே....."

குமார் அம்மாவிடம் கேட்பது உதயனுக்குக் கேட்கிறது.

"ஏன்... என்ன விஷயம்....இண்டைக்கு டியூசன் இல்லையா...?"

"இல்லையம்மா... இண்டைக்கு மட்டுமில்ல தொடர்ந்து நாலு நாளைக்கு டியூசன் இல்ல"

"போய் வர கனநேரம் செல்லுமா...?"

"இல்லையம்மா...ஒரு அரைமணி நேரத்துக்குள்ள வந்திடுவம்"

"ம்...அப்ப சரி. கவனமாய் போயிற்று சுணங்காம வரப் பாருங்க... வாறன் உதயனுக்கு தேத்தண்ணி ஊத்தித் தாறன். குடிச்சிற்று போகட்டும்..."

"இல்லையம்மா.. இப்பதானே சாப்பிட்டு இருப்பான். ரெண்டு பேரும் போயிற்று வாறம். ஊத்தித் தாங்க. என்ன?" கூறியபடியே வெளியே வந்த குமார் உடைமாற்றித் தயாராக இருந்தான்.

"சைக்கிளிலயா வந்தனீ...?" குமார் கேட்டான்.

"நான் சைக்கிளில தான் வந்தனான்...ரெண்டு சைக்கிளில போவம். நீயும் சைக்கிள எடுத்து வா..."

"அம்மா நாங்க போயிற்று வாறம்..." குமார் தனது சைக்கிளை உருட்டியபடி கூறுகிறான்.

இருவரும் நாதனது வீடு நோக்கி பயணத்தைத் தொடர்ந்தனர். சிவன் கோயிலைக் கடந்து அவர்களது சைக்கிள்கள் உவர்மலை நோக்கி விரைந்தன.

நாதன் இவர்களையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன். இவர்களைக் கண்டதும் கேற்றடிக்கு ஓடி வந்து கேற்றைத் திறந்தான். "நீங்க ரெண்டு பேரும் சொன்ன நேரத்துக்கு வருவீங்களோ, வரமாட்டீங்களோ எண்டு குழம்பிக் கொண்டுதான் இருந்தனான். அப்பாவும் வெளியில போக வெளிக்கிட்டுக் கொண்டு இருக்கிறார். போனா வரச் சுணங்கும். அதுதான் கவலைப்பட்டனான். நல்ல வேளையா சொன்ன நேரத்துக்கே வந்திட்டீங்க. இப்பதான் கொஞ்சம் ஆறுதலா இருக்கு."

நாய்க்குட்டிப் பொம்மைபோல தலையை மேலும் கீழும் ஆட்டியபடி கூறிய நாதனது குரலில் மகிழ்ச்சி தெரிந்தது.

"இவன் சாப்பிட்ட உடனேயே வந்திட்டான் போல. ஒரு மூண்டரைக்குள்ளேயே வீட்ட வந்திட்டான். நானும் வெளிக்கிட்டு ரெடியா இருந்தன். இவன் வந்த உடனேயே ரெண்டு பேரும் சுணங்காம இங்க வந்தம். இனி என்ன எங்களுக்கு வேல...? கந்தளாய்க்குப்போற ஒண்டுதானே வேல... அது மட்டும் [illegible] எண்டுறது என்ர எண்ணம்"

கூறிய படி குமார் முற்றத்து மாமரத்தின் கீழ் தனது சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டினுள் நுழைகின்றான். உதயனும் அவனைத் தொடர்ந்தபடி வீட்டினுள் செல்கின்றான்.

நாதன் கதிரைகளை இழுத்து கைகளால் துடைத்து விட்டபடி "ரெண்டு பேரும் இருங்க நான் அம்மாவ வரச்சொல்லுறன்" என சற்று சத்தமாகக் கூறியவன், "மச்சான் பக்குவமாக் கதையைப் போடுங்கடா..." என மெதுவாகக் கூறியபடி வீட்டினுள் செல்கின்றான். பக்கத்து மேசையில் கிடந்த விஜய் பத்திரிகை கண்களில்பட, குமார் மெல்ல எட்டி அதனை எடுத்துப் படிக்கத் தொடங்குகிறான்.


உதயன் கால்களை வசதியாக நீட்டியபடி அமர்ந்தவன் தன்முன் தெரியும் துறைமுகத்தைப் பார்த்தவாறு சிந்தனையில் மூழ்குகின்றான். கடல் காக்கைகள் கீழே பறந்து கிடக்கிறது. பென்சிலால் கோடு வரைந்தது போல நீண்டு, வளைந்து கிடக்கும் வீதிகள். வீதிகளை எல்லையாகக் கொண்டு பரந்து விரிந்து கிடக்கும் துறைமுகக் கடலைச் சிறைப்படுத்தி இருப்பதைப் போல சுற்றவர எழுந்து நிற்கும் பசிய மரங்களால் மூடப்பட்ட மலைகள். அதில் ஒரு மலையின் அருகில் தீப் பெட்டிகளை அடுக்கி வைத்திருப்பது போல எழுந்து நிற்கும் பிரமா மா ஆலை. அதன் கீழே நங்கூரம் இட்டிருக்கும் அந்தப் பெரிய கப்பல்கள் மூன்று. வீதியின் கரையை அண்டி கரையேற்றப்பட்டிருக்கும் மீன்பிடி றோலர்கள். அவற்றில் பறந்து கொண்டிருக்கும் வெள்ளை, சிவப்புக் கொடிகள். அவை காற்றில் அசைந்தாடும் அழகு. வீதியிலே வரிசை வரிசையாக ஓடும் வாகனங்கள். எல்லாமே கால்களின் கீழே காணப்படுவதும், தான் உயரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பதும் உதயனுக்கு ஒருவித ஆனந்தத்தைத் தருவதாயிருக்கிறது.

கடலின் ஈரலிப்பைச் சுமந்து வரும் காற்று உடம்பைத் தொடுகையில் அதுவே ஒருவித களிப்பைத் தர, உதயன் தன்னையே மறந்து கதிரையில் சாய்ந்து கிடக்கிறான்.

"ஹலோ...வாங்க... வாங்க... ரெண்டு பேரையும் ஒரேயடியாக இங்க பார்க்க சந்தோஷமா இருக்குது...ரெண்டு பேரும் எங்கட வீட்ட வந்து நாலு கிழமைக்கு மேல இருக்கும் போல...என்ன...?

(தொடரும்...)


கரடியார் வைத்த கணிப்பீடு
சென்றவாரத் தொடர்ச்சி...
கரடி ஒவ்வொரு மாணவர்களின் செயற்பாடுகளையும் உன்னிப்பாக அவதானித்தபடி இருந்தது.
36
ஒருவருக்கொருவர் ஒற்றுமையாய் பகிர்ந்து கொடுத்துக் கீறுங்கள்.
37
எல்லா விலங்குகளும் யோசனையோடு வரைய ஆரம்பித்தன.
38
முயலுக்கு எப்பொழுதும் கரட்டின் ஞாபகம் என்பதால் அது திருக்குறளை மறந்து கரட் ஒன்றை வரைந்தது.
39
மான் எதற்கும் பொருந்தட்டும் என நினைத்து ஒரு அழகிய பழத் தோட்டத்தை வரைந்தது.
40
கிளிக்கு. தீயவை தீய பயத்தலால்... என்ற குறள் ஞாபகத்துக்கு வந்தது. அது ஒரு கழுகை வரைந்தது.
41
அணிலுக்கு திருக்குறள் எதுவும் ஞாபகத்துக்கு வரவில்லை. அது திரு திரு என முழித்தது.
42
கல்வித் தாயின் கடைக்கண் பார்வைகூட எனக்கு இல்லைப் போலும். அதுதான் எதையும் படமாக்க முடியாதிருக்கிறது.
முயல் எதனைக் கீறுவது என்று குழம்பி இறுதியில் இரு கண்களை மட்டுமே வரைந் தது.
43
அதற்குமேல் வரையத் தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தது.
44
யோசித்தபடியே தனது வாலை ஆட்டியது. அது வைத்திருந்த வர்ணக் குழம்புகள் நிலத்தில் சிந்தியது.
45
46
வரைதல் பேப்பரிலும் வர்ணத்துளிகள் பட்டு புள்ளி புள்ளியாக இருந்தன. அணில் பயமும், கவலையும் அடைந்தது.
அணிலினது வரைதல் பேப்பரை கரடி வாங்கிப் பார்த்தது.
47
இந்தப் படம் எந்தத் திருக்குறளை விளக்குகிறது. ...?
ஆசிரியர் கரடி - முயலின் படத்தைப் பார்த்துக் குழம்பியது.
நன்று.. நன்று மிக நன்றாக வரைந்திருக்கிறார் கெட்டிக்காறன்.
48
கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்.
என்ற திருக்குறளுக்குப் பொருத்தமான படத்தை வரைந்திருக்கிறீர்கள். இதற்கு இருபது புள்ளிகள் போடலாம்
49
என்னது...? அப்படி ஒரு திருக்குறள் இருக்கிறதா? எனக்கு இதுவரை தெரியாதே...
அணில் தனது அறியாமையை ஆசிரியர் கரடியிடம் கூற முடிவெடுத்தது. (முற்றும்)


யார் புத்திசாலி
1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்த ராகவனும், கலாதரனும் உழைப்பின்றி வறுமையால் வாடினர். தங்களுக்கு கிடைத்த காணியில் இருந்தபடி இறையருளை வேண்டி நின்றனர்.
இறைவா! எல்லவற்றையும் இழந்துவிட்டோம். உன்மீதான நம்பிக்கை மட்டும் எஞ்சியுள்ளது. நாங்கள் வாழ ஏதாவது வழிகாட்டு.
இவர்களது வேண்டுதலைக் கேட்ட ஒரு வனதேவதை உதவ வந்தது.
உங்களது உறுதியான நம்பிக்கையைப் பாராட்டுகின்றேன். எங்கள் மீது நம்பிக்கை வைக்குமுன் உங்கள் உழைப்பின் மீது நம்பிக்கை வையுங்கள். நீங்கள் உழைப்பதற்குத் தேவையான ஒருசில கருவிகள் மட்டும் கேளுங்கள்.
ராகவன் விரைவாகப் பணம் தேட விரும்பி மரங்களை வெட்டி விற்றுக் காசாக்கும் எண்ணத்தோடு - கோடரி ஒன்றைக் கேட்டான். கலாதரன் - பயிர் செய்ய எண்ணி அதற்குரிய கருவிகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்டனர்.
இவர்களுக்குரிய கருவிகளைக் கொடுத்து விட்டு வனதேவதை மறைந்து போனாள்.
ராகவன் மரங்களை வேகமாக வெட்டி விற்றுப் பணம் உழைத்தான்.
கூடுதலாக வெட்டி விற்றால் பணம் அதிகமாக வரும்.
எங்கட பகுதி மண்ணைவிட இந்த மண் வளமானது போல் தெரிகிறது. எல்லாப் பயிரும் செழித்து வளருகிறதே.
ராகவன் எல்லா மரங்களையும் வெட்டிப் பணமாக்கினான்.
சில நாட்களின் பின் ... எல்லா மரங்களையும் வெட்டி வீழ்த்தி விட்டேனே!! இனி வருமானத்துக்கும், வாழ்க்கைக்கும் என்னசெய்வது?
ஆகா! பயிர்கள் பூத்துக் காய்த்து விட்டன. இனி எமக்குத் தெடர்ந்து வருமானம் தான். கவலையே இல்லை.
கலாதரா? மரங்களை எந்தக்காலத்திலும் அழிக்காதே. எதையும் அழித்துப் பணம் தேடாதே. உழைப்பின் மூலம் நீண்டகாலம் பலனைப்பெற விவசாயம் செய்து வாழப்பார். என்னோடு வா. நான் உனக்கு வேலை தருகிறேன்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி
- திருக்குறள்

## நமது நோக்கு

# இதுவே சந்தர்ப்பம்!

திட்டமிட்டபடி அடுத்தகட்டப் பேச்சு நடைபெறும் என்கிறது அரசாங்கம். ஆனால், இராணுவத்தின் துணையுடன், ஆயுதக் குழுக்கள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் தொடர்ந்தால் ஏப்ரலில் நடைபெறவுள்ள பேச்சுகள் ஒத்திப்போடப்படும் நிலை ஏற்படும் எனக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்.

இந்த நிலையில் அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் ஜெனிவாவில் நடக்குமா - இல்லையா என்ற கேள்வி மக்கள் மத்தியில் இப்போதே எழ ஆரம்பித்து விட்டது.

ஏனென்றால், வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரச படைகளுடன் சேர்ந்து இயங்கும் துணை ஆயுதக் குழுக்களின் தாக்குதல்கள் சமீப நாட்களாகத் தீவிரம் பெறத் தொடங்கியிருக்கிறது.

மட்டக்களப்பில் புலிகள் இயக்கத்திலிருந்து விலகிய இளைஞர் சூட்டுக் காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டது, வவுனியாவில் நடந்த இரட்டைக் கொலை, திருகோணமலையில் காவலரண் மீதான தாக்குதலில் போராளி உயிரிழப்பு இவையெல்லாமே ஒரு வாரத்துக்குள் இடம்பெற்ற சம்பவங்கள்.

இதைவிட பல ஆட்கடத்தல்கள், ஊடுருவித் தாக்குதல் முயற்சிகள் என ஆயுதக் குழுக்களின் சமாதான சீர்குலைப்பு முயற்சிகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

இந்தக் கட்டத்தில் ஜெனிவா பேச்சுக்கள் தொடருமா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுவது யதார்த்த பூர்வமானதுதான்.

ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதாக ஜெனிவாவில் ஒப்புக்கொண்ட அரச தரப்பு-அந்த இணக்கப்பாட்டை அமுல்நடத்தத் தவறிவருவதானது- நோர்வேயின் சமாதான நகர்வுகளை மீளவும் படுகுழிக்குள் தள்ளுவதாகவே தெரிகிறது.

தம்மிடம் எந்த ஆயுதக்குழுவும் கிடையாது என்று வாதிட்ட அரசு - இப்போது புலிகள் மீதான, தமிழ் மக்கள் மீதான - ஆயுதக்குழுக்களின் தாக்குதல்களுக்கு ஒத்தாசை கொடுப்பது தமிழ்மக்களை பெரிதும் விசனத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

இந்தக் கட்டத்தில் புலிகளின் வெறுப்பும் சினமும் எத்தகையதாக - எத்தனை மடங்கு பெரியதாக இருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஆனால், சமாதான முயற்சிகளில் புலிகள் மிக மிக அவதானமாகவே தமது நகர்வுகளைகக் கையாண்டு வருகின்றனர்.

அரசதரப்பு ஜெனிவாவில் ஏற்படுத்திய இணக்கப்பாட்டை மட்டுமன்றி - இதற்கு முன்னர் நடைபெற்ற பல்வேறு பேச்சுக்களின்போது எட்டப்பட்ட இணக்கப்பாடுகளையும்கூட அமுல்படுத்தியதாக வரலாறு இல்லை.

அப்படி இந்த இணக்கப்பாடுகளை அமுல்செய்யும் நிலையில் இருந்திருப்பின் - நான்கு வருடங்களுக்கு முன்னர் தொடங்கிய கட்டத்தில் இருந்தே ஜெனிவாப் பேச்சுக்களை தொடரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

எனவே, இலங்கை அரசு முன்னரும் சரி, இப்போதும் சரி சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான ஆதரவைக் கொடுப்பதில்லை என்பதுதான் உண்மை.

இது சர்வதேச சமூகத்துக்கு இப்போதுதான் மெல்ல மெல்ல புரியத் தொடங்கியிருக்கிறது.

அரசின் சமாதான முயற்சிகள் குறித்து நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் - வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் விசனம் வெளியிட்டிருந்தது இதில் ஒரு கட்டம்தான்.

இணைத் தலைமை நாடுகளோ அல்லது வேறு நாடுகளோ இதுவரை இலங்கை அரசு சொல்வதையே கேட்டுக்கொண்டிருந்த நிலை மாறி - உண்மையை பகுத்துணரும் கட்டத்தை நோக்கி தள்ளப்பட்டிக்கின்றன.

இந்தக் கட்டத்தில்தான் இலங்கை அரசு ஆயுதக் குழுக்களைக்கொண்டு சித்துவிளையாட்டு விளையாட முற்படுகிறது. இலங்கை அரசுக்கு ஜெனிவா பேச்சுக் களம் வெறுப்பையே ஏற்படுத்தியிருப்பதால் -

எப்படியாவது புலிகளை அங்கு வராமல் தடுக்க இப்படிப்பட்ட தாக்குதல்களை தொடர்கிறதா என்றும் சந்தேகம் எழுப்ப வைக்கிறது.


ஆயுதக் குழுக்களது செயற்படு தன்மையின் உள்நோக்கம் என்ன என்பதை சர்வதேச சமூகம் ஆராய்ந்து முடிவுகட்டவேண்டிய காலம் வந்துவிட்டது.

இந்த வாய்ப்பைச் சர்வதேச சமூகம் தவறவிட்டால் சமாதான முயற்சிகளினூடாக இலங்கையில் அமைதியைத் தோற்றுவிக்கும் சந்தர்ப்பத்தை அவர்கள் இழந்துவிடுவர்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்

செய்தி-பளுதூக்கும் போட்டியில் இலங்கை வீரருக்கு தங்கம்!




நன்றி: டெய்லி மிரர்

# அமைதிப் படையினரின் பாணியை பின்பற்றும் இலங்கைப் படையினர்

### ஊர்சுற்றியார் எழுதுவது

வெளிநாடுகளிடமிருந்து நமது அறிவுக்கும், வளர்ச்சிக்கும் தேவையானவற்றைக் கற்றுக்கொள்வதும் பின்பற்றுவதும் அவசியமாகும். கண்டதையெல்லாம் கண்ணை மூடிப் பின்பற்றுவது கூடாது. இப்பொழுது வடக்கில் குவிக்கப்பட்டிருக்கும் படையினர் இது வரை தாங்கள் பின்பற்றி வந்த நடைமுறைகளில் மாற்றம் செய்து, சுமார் இருபதாண்டுகளுக்கு முன், இங்கு அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் செய்தவைகளைப் பின்பற்றிச் செய்து பார்ப்பதாகத் தெரிகிறது. இந்திய இராணுவம் செய்த அத்தனை வேலைகளையும் இலங்கைப் படைகள் செய்யத் துணிய மாட்டா என்று நம்புகிறேன் என்று சொல்லிக்கொண்டு என் முன்னே வந்தமர்ந்தார் நண்பர் பரதேசியார்.

அப்படி என்ன புதுமையான மாறுதலை இலங்கைப் படைகளிடம் கண்டீர்? என்று கேட்டேன். இந்திய அமைதிப்படை இங்கு வந்திருந்தபோது, ஒரு வீட்டில் ஒரு குடும்பப் பெண் காலையில் எழுந்து அறைக் கதவைத் திறந்து கிணற்றடிக்குப் போவதற்காக வெளியே கால்வைத்தபோது, வாசலில் துப்பாக்கி ஏந்திய இந்திய சிப்பாய் நின்றதைக்கண்டு திகைத்துப் போன சம்பவத்தைச் சொல்லியிருந்தது நினைவுவருகிறது. இப்போது இலங்கைத் துருப்புக்களும் வடக்கில் வீட்டு வாசல்களிலும், கடைவாசல்களிலும், மூலை முடுக்குகளிலும் துப்பாக்கி ஏந்திய படி நின்று இந்தியப் படைகளை நினைவுபடுத்திக்கொண்டு நிற்கிறார்கள். இதைத்தானே சொல்கிறீர் என்று நான் கேட்டேன்.

ஓமோம். அதைத்தான் சொன்னேன் இந்தியப் படைகள் மாதிரி பெரியாஸ்பத்திரிக்குள்ளும் மற்றும் மருத்துவ மனைகள், கல்விக்கூடங்களுக்குள்ளும் போய் சுட்டுத்தள்ளாமல் இருந்தால் சரி! என்று பரதேசியார் சொன்னார்.

இவர்கள் ஏதோ கோயில்கள், தேவாலயங்கள், மருத்துவ மனைகள், கல்வி நிலையங்கள் என்று தவிர்த்து, போர்நெறி முறை தவறாமல் நடந்து கொண்ட மாதிரிச் சொல்கிறீர். முன்பு தரையில் நடந்து வரவும், வாகனங்களில் செல்லவும் பயந்து வானத்திலிருந்து இந்த இடங்கள் மீது குண்டுகள் பொழிந்து மருத்துவமனைகளையும் தாக்கினர். கல்வி நிலையங்கள் மீது குண்டுவீசி கல்வி கற்கும் பிள்ளைகள் பலரைக் கொன்றொழித்தவர்கள்தான், தேவாலயத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்த அப்பாவிகள் பலரை விமானத்திலிருந்து குண்டுவீசிக் கொன்றொழித்தவர்களும் இலங்கைப் படையினர்தான் என்பதை மறந்துவிட்டீரா என்று கேட்டேன்.

இரண்டு படைகளுக்கும் அதிக வித்தியாசமில்லைத்தான். இப்பொழுது இலங்கைப் படையில் துருப்புக்கள் அதிகம் இருக்கிறார்கள் போலத் தெரிகிறது. வடக்கில் எங்கே பார்த்தாலும் படையினர் குவிக்கப்பட்டிருக்கின்றனர். இலங்கையின் முப்படைகளிலிருந்தும் எழுபதாயிரம் சிப்பாய்கள் வரை தப்பியோடிவிட்டதாகச் செய்திகள் தெரிவித்தன. மீண்டும் படைகளுக்கு ஆட்கள் அதிகம் சேர்ந்திருக்கிறார்கள் போலத் தெரிகிறது. முன்பு பிக்கு ஒருவர் படைகளுக்கு ஆட்களைத் திரட்டித் தருவதாகத் தெரிவித்திருந்தார். பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க - சந்திரிகா அமைச்சரவை யில் பிரதமராக இருந்தபோது, கதிர்காமத்திலிருந்து படைகளுக் குப் பத்தாயிரம் பேரைத் திரட்டப் பாதயாத்திரையாகப் புறப்பட்டும் வெற்றி பெற முடியாமல் போய்விட்டது. இப்பொழுது போர் முழக்கம் செய்யும் ஜே.வி. பியும், ஹெல உறுமயவும் ஆட்திரட்டித் தயாரித்திருக்கிறதோ தெரியவில்லை என் றும் பரதேசியார் சொன்னார்.

ஒன்று மட்டும் நிச்சயம். ஒரு போரைத் தொடங்குவதற்குப் பேரினவாதிகளும் படைத்தரப்பில் சில பகுதியினரும் அவதிப்படுகிறார்கள். ஆட்சி பீடத்திலிருக்கும் சிலருக்கும் இதில் ஒரு ஆசையிருக்கிறது.

மீண்டும் நாடு நாடாகச்சென்று ஆயுதங்கள் சேர்க்கிறார்கள். புலிகளின் கடற்படை பற்றி கதிர்காமர் பயமுறுத்தியதால், இப்போது பாகிஸ்தான் கடற்படையின் உதவியையும் சிறிலங்கா நாடி நிற்பதாகத் தெரிகிறது. போகிற போக்கைப் பார்த்தால் சிங்கள ஆதிக்க சக்திகளும், பேரினவாதிகளும் யுத்த சன்னதம் கொண்டு நிற்பது நன்றாகத் தெரிகிறது. வெளிநாடுகள் சிலவும் வேடிக்கை பார்க்கவோ, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவோ தயாராக இருப்பதுபோலவும் தெரிகிறது. புலிகள் போருக்குத் தயாராகிறார்கள் என்று சொல்லி, அவர்கள் தயாராக நிற்கிறார்கள் என்று சொன்னேன்.

முன்னரும் இப்படித்தான் சந்திரிகா அம்மையாரும் படையினரை நம்பியும், வெளிநாட்டுப் படைச்சாதனங்கள், வெளிநாட்டு ஆயுதங்களை நம்பியும் போருக்குத் துணிந்தார். வெளிநாட்டு ஆயுதங்கள் தங்களிடம் இருப்பதையும் பெரிதாகச் சொன்னார்.

புலிகள் போர் நிறுத்தத்தை ஒருதலைப் பட்சமாகக் கடைப்பிடிப்பதையும், பொருட்படுத்தாமல் போரில் இறங்கியும் சிறிலங்காப்படை புலிகளின் எதிர்த்தாக்குதலுக்கு நின்று பிடிக்க முடியாமல் போர் நிறுத்தத்துக்குச் சம்மதித்துப் பின்னர் சமாதானப் பேச்சுக்கு சந்திரிகா அம்மையார் முன் வந்தார்.

இதைத் தென்னிலங்கை மறந்துவிட்டதாக்கும் என்று சொல்லிக்கொண்டெழுந்த பரதேசியார், இராமாயணத்தில் வாலியை சுக்கிரீவன் மீண்டும் சண்டைக்கு அழைத்தபோது வாலி சந்தேகப்படாததையும் நாம் நினைவில் கொள்ளவேண்டுமென்று சொல்லி நடந்தார்.

# பரதேசியும் ஊர்சுற்றியும்!

### வாசகர் நோக்கு

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
22.03.2006.

ஓட்டோ கட்டணங்கள் ஓடாமல் நிற்குமா? என்று ஊர்சுற்றியாரும், பரதேசியாரும் பேசிக் கொண்டதை நினைத்து வெட்கப்படுகிறேன். அவர்கள் கதைக்கிறார்கள், அங்கு ஆட்டோக்காரரர் 20/-ரூபாதான் கேட்டார். எனக்கு ஆச்சரியம் இங்கேயென்றால் 60/-ரூபாவுக்குக் குறைவாக வாங்கமாட்டார்கள் என்பதாக.

இந்த ஊர் சுற்றியாருக்கும், பரதேசியாருக்கும் இந்த நாட்டில் நடக்கும் எத்தனையோ ஊழல்கள் தெரியவில்லை. ஓட்டோகாரரர்கள்தான் கண்ணுக் குத் தெரிகிறார்கள்.

இவர்கள் தெரியாததாகக் காட்டிக்கொள்ளும் சிலவற்றை இங்கு சுட்டிக் காட் டியே ஆகவேண்டும்.

இந்தியாவில் ஒரு ஆட்டோ என்னவிலை? இலங்கையில் அல்லது யாழ்ப்பாணத்தில் என்னவிலை? அங்கு ஒரு இலட்சம் பெறுமதியான பொருள் இலங்கையில் 3 1/2இலட்சம். ஒரு மோட்டார் சைக்கிள் அங்கு ரூபா 33 000/- என்றால் இங்கு அதன் விலை ரூப 110 000/- வாசிக்கின்ற புத்தகம் ஒன்று அங்கு ரூபா 50/- என்றால் இங்கு அதன் விலை நான்கு மடங்கு, அதாவது ரூபா 200/-. இதேபோலத்தான் பெற்றோலும் மூன்று மடங்கு விலை வித்தியாசம் உண்டு. ஆனால், கூலி மூன்று மடங்காக இருக்கக் கூடாதாம்?

இவற்றைக் கவனிக்காமல் ஏன் இந்த ஊர்சுற்றியார் பரதேசிக்கோலம் பூண்டு இவ்வாறு எழுதுகின்றாரோ தெரியவில்லை.

ஓட்டோக்களும், ஓட்டுநர்களும் மண் மேல்கொண்ட பற்றுக் காரணங்களுக்கா அரச படைகளால் துன்புறுத்தப்படுவதை ஏன் ஊர்சுற்றியார் கண்டுகொள்ளவில்லை.

மேற்காட்டிய விபரங்கள் எமது கூலியில் தவறு இல்லை என்பதைக் காட்டுகிறது.

அன்புடன் -
சி.சிவநேசன், ஓட்டோ உரிமையாளர்.

# பட்டதாரி ஆசிரியர் நியமனம்
# கல்வி மேம்பாட்டுக்கு சாதகமா?

பாடசாலை கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்பதில் ஆசிரிய வள ஆளணியினர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஒழுங்கமைந்த வகையில் மாற்று நிலை நோக்கிய அபிவிருத்திச் சிந்தனையின் பின்னணியில் இயங்காற்றல் பெறச் செய்வது ஆசிரியரின் முக்கிய பங்குகளில் பிரதானமானதாக அமைகிறது. இதற்கு ஆசிரியரின் செயற்பரிமாணம் பல்பரிமாண வகையில் அமைதல் எதிர்பார்க்கப்படும் முக்கிய விழுமியமாகவுள்ளது.

இந்த வகையில் நோக்குகின்ற பொழுது ஆசிரிய செயற்பாடு. அறிவு சார்ந்த விடயத்தை சார்ந்ததாகவும் தொழில்சார் பயிற்றுத்திறன்கள் அடிப்படையைக் கொண்டதாகவும் அமைகிறது. குறிப்பாக ஆசிரியத் தொழிலைப் பொறுத்தவரையில் தொழில் பயிற்சி என்பது வலுப்பெறுகின்ற சிந்தனையாக உலகளாவிய ரீதியில் காணப்படுகிறது. தொழில் சார்ந்த பயிற்சியோ அல்லது முன் ஒழுங்குபடுத்தல் செயற்திட்டமின்றி ஆசிரியப் பணி முன்னெடுக்கப்படுவது உலகில் மிக மிகக் குறைவான செயற்பாடாகவே உள்ளது.

இலங்கையில் ஆசிரியர் தொழிலில் உள்வாங்கப்படும் ஆசிரிய ஆளணியைப் பொறுத்த வரையில் பொதுவான தர அடிப்படையோ அல்லது பயிற்சி முறையோ நியமனம் வழங்கப்படாத தன்மையையும் அரசியல் மற்றும் தனிப்பட்ட செல்வாக்கு மற்றும் வேறுதுறை சார்ந்தோர் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்கும் களமாக அமைவதைக் காணமுடிகிறது. அண்மைக் காலங்களில் அரசியல் செல்வாக்குகளினாலும், அரசியல் இலாபத்துக்காகவும்,ஆசிய தொழில் நியமனம் வழங்கப்படுவதைச் சுட்டிக் காட்ட முடியும்.

மலையக நிலையைப் பொறுத்த வரையில் ஆசிரிய நியமனத்துக்கான தரநிலைமை மிகமிகக் குறைவான ரீதியில் கணிக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும் முறையையும் ஒப்பிட்டுக் காணமுடிகிறது. இத்தகைய நிலைமைகள் ஒட்டுமொத்த சமூக அபிவிருத்தியையும், வீழ்ச்சி நோக்கிய கல்வி அடைவு நிலைக்கும் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணியாகவும் அமைந்து விடுகிறது.

ஆசிரிய தொழில்துறையை பொறுத்தமட்டில் நியமனமுறையில் ஊழல் நடைபெறுகின்ற அதே வேளை கீழ்வரும் நியமனங்களினாலும் கல்வித்துறை அபிவிருத்தி என்பது கேள்விக் குறியாகியுள்ளது.

*1. பட்டதாரிகளை ஆசிரியை ஆளணியினராக தொழில்சார் பயிற்சியின்றி உடனடியாக நியமனம் செய்தமை.*

*2. பாடசாலைகளில் எதுவித தொழில்துறைசார் பயிற்றுத் திட்டங்களுக்குள் உட்படுத்தப் படாமல் சேவைபுரிவோர்.*

இத்தகைய சந்தர்ப்பங்களால் பாடசாலை மட்ட முகாமைத்துவ செயற்பாட்டிலும், கல்வித் தரநிலையிலும் பல்வேறு நேரடி, மறைமுகமான இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளதைத் தற்போது அதிபர்களின் வாயால் அறியமுடிகிறது. ஆசிரிய நியமனப் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுவதில் எந்தவித தவறையும் கூற முடியாது. அதேவேளை, அவர்களுக்குப் பயிற்சித்திட்டம் இதுவரை ஒழுங்கான முறையில் வழங்கப்படாமையே மிகப் பெரிய தவறாக இனங்காணமுடிகிறது. இதற்குக் கல்வித்துறை சார் அதிகாரிகளே பொறுப்புக் கூற வேண்டியவர்களாக உள்ளனர். ஆசிரிய பயிற்றுத் திட்டங்களை முன்னெடுத்துவரும் நிறுவனங்களும் இந்த விடயத்தில் பாராமுகமாக இருந்து வருவது ஒட்டுமொத்த சமூக பின்னடைவுக்குமே காரணமாக அமைந்து விடுவதை உணருவதாக இல்லை.

அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரிகள் தமக்கு - ஆசிரிய பணியை முன்னெடுப்பது பற்றிய முறையான பயிற்சி இதுவரை வழங்கப்படாமை பெரும் இடர்பாடாகவுள்ளது என குறிப்பிடுவதைக் கொண்டு இவர்களின் முக்கிய பிரச்சினைகளை இது வரை கல்விசார் அதிகார வர்க்கம் உணர்ந்து கொள்ளாததை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவுள்ளது.

கல்வி சார் அதிகாரிகள் மற்றும் ஆசிரிய பயிற்சி நிறுவனங்களோ கல்வி அபிவிருத்தி என்ற நோக்கில் கோட்ட மட்ட , வலயமட்ட ,பாடசாலை மட்ட மேற்பார்வை என ஓடித்திரியும் இவர்கள் பட்டதாரிகளின் பிரச்சினையை தெரிந்தும் தெரியாமல் இருப்பதுவும் அல்லது அதற்குரிய பரிகார நடவடிக்கை மேற்கொள்ள எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமல் இருப்பதும், மாணவர்களுக்கு பரிகார நடவடிக்கையை எடுக்க வேண்டும் என கூறுவதுடன் முரண்படுவதாகவுள்ளது.

அண்மையில் இடம் பெற்ற பட்டதாரிகள் நியமனத்தில் அடுத்த மிக முக்கிய பிரச்சினையாகப் பொருத்தமற்ற ஆசிரிய நியமன முறையாகும். குறிப்பிட்ட வலயத்தில் ஒன்றில் ஆரம்பக்கல்விப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரிய வள ஆளணி ஒன்று வெற்றிடமாக இருந்த வேளை, அந்த வலயத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியை உள்ளக இடமாற்றம் கோரி வலயக் கல்விப் பணிமனைக்கு விண்ணப்பித்த பொழுதும் பிறிதொரு பாடசாலையிலிருந்து பட்டதாரி ஆசிரியை ஒருவரை நியமனம் செய்துள்ள உண்மைச் சம்பவம் யாழ்ப்பாண மாவட்டத்தில் சென்ற வருடம் இடம் பெற்றுள்ளது. இதற்கு ஆசிரியையுடனான தனிப்பட்ட ரீதியான பழிவாங்கலே முக்கியமாக அமைந்ததை அந்த ஆசிரியை கூறியதுடன் , தான் உள்ளக இடமாற்றம் கோரியமைக்கு தான் பணியாற்றும் பாடசாலையில் மேலதிக ஆசிரிய வள அணி இருந்தமையே அடிப்படைக் காரணம் எனக் கூறியிருந்தார். குறித்த வலயத்தின் பாடசாலை மட்ட ஆளணிப் பதிவேட்டிலும் மேலதிக ஆளணி உள்ளமை குறிப்பிட்டு இருந்ததையும் ஆசிரியை சுட்டிக் காட்டி இருந்தார்.

இத்தகைய தனிப்பட்ட பழிவாங்கல் நிமித்தமும், பொருத்தமற்ற பட்டதாரிகள் நியமனம் பயன்படுத்தப்படுவதையும் கல்விச் சமூகம் அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு யார் மேலதிகாரிகளாக செயற்படுகின்றார்களோ அவர்களே அதற்கு சமூக நோக்கில் வகைகூற வேண்டியவர்கள்.

மாணவர்களுக்கு மட்டும் ஆசிரியர்களை தயார் படுத்தாமல், ஆசிரியர்களை வழிப்படுத்துபவர்களும் தம்மை மாற்றியமைக்க வேண்டும். அதேவேளை நாமும் குறுகிய வட்டத்துக்குள் நின்று சிந்திக்காமல், பரந்துபட்ட வகையில் சிந்தித்து அதற்கு ஏற்ற வகையில் சொற்களால் மட்டுமன்றி, செயல்களாலும் ஆக்கபூர்வமான முகாமைத்துவச் செயற்பாட்டை முன்னெடுக்கவேண்டும். ஆசிரியர் உரிமையையும், கடமையையும், சுதந்திரமாகக் கதைப்பதைக்கூட விரும்பாத கல்வி நிர்வாகம் மாணவர்களுக்கு எவ்வாறு சுதந்திரமான கற்றலுக்கு வழிப்படுத்த முடியும்.

**யாழ்.நிரூபன்**

# அதிகரித்து வரும் “காசநோய்” ஆபத்து

எமது தாயகப் பிரதேசங்களில் கடந்த மூன்று தசாப்த காலங்களாகத் தொடர்ச்சியான யுத்த இடப்பெயர்வுகள் மற்றும் சுனாமி அனர்த்தங்களால் இடம் பெயர்ந்த மக்கள் சூரிய ஒளி, காற்றோட்டம் குறைந்த சிறு கூடாரங்களில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் காசநோயின் பரவலும் தீவிரமடையும் அபாயம் நிலவுவதை தமிழீழ சுகாதார சேவையினர் இனங்கண்டுள்ளனர். தற்போது இது ஒரு பாரிய பிரச்சினை அல்ல எனினும் தடுக்கமுடியாதபடி இது அதிகரித்து வருவதால் இதைத் தடுப்பது மிக அவசியம்.

காசநோயானது சளிச்சுரம் போன்றே ஒரு தொற்று நோயாகும். இது ஒரு பரம்பரை நோயுமல்ல. காசநோய் பற்றிச் சமூகம் ஒரு மூட நம்பிக்கையிலுள்ளது. எனவே, இந்த நோய் பற்றிய சரியான அறிவு அவசியம். முறையான சிகிச்சை மூலம் முற்றாகக் குணப்படுத்தலாம்.

**காசநோய் என்றால் என்ன?**

பொதுவாக எல்லோராலும் கசம், கசரோகம் என அழைக்கப்படும் காசநோயானது மைக்கோ பக்ரீரியம் ரீயூபகுளோஸிஸ் (Mycobacterium Tuberculesis) எனப்படும் எரு பக்ரீறியாவால் உண்டாகும் ஒரு நோயாகும். கி.மு 8000 ஆம் ஆண்டளவில் எகிப்திய பிரமிட்டுக்களிலிருந்து எடுக்கப்பட்ட மம்மியின் உடலில் இந்த நோய்க்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளது. இது 1882 மார்ச் 24 ஆம் திகதி ரொபட் கொக் (Roberhock) எனும் ஜேர்மனிய வைத்தியரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக மார்ச் 24 ஆம் திகதி காசநோய் விழிப்புணர்வுத் தினமாக அனுட்டிக்கப்படுகின்றது.

**உலகில் காச நோய் எவ்வாறு உள்ளது?**

- உலகில் ஒவ்வொரு விநாடிக்கும் ஒருவர் காசநோய் கிருமித் தொற்றுக்குள்ளாகின்றார்.
- ஒவ்வொரு நான்கு விநாடிக்கும் ஒருவர் காசநோயாளராகின்றார்.
- ஒவ்வொரு பதினைந்து விநாடிக்கும் ஒருவர் இறக்கிறார்.
- வருடத்திற்குச்சுமார் 2 தொடக்கம் 3 மில்லியன் பேர் காசநோயாளியாக இறக்கின்றனர்.
- உலக சனத்தொகையில் 1/3 சனத்தொகையினர் காசநோய் தொற்றுக்குள்ளாகின்றனர்.
- எமது மக்களில் 50%ற்கும் மேற்பட்டோருக்கு காசநோய் கிருமி உடலில் உள்ளது.
- உலகில் நிகழும் பெண்களின் மரணங்களுக்கு பிரதான காரணம் இந்த நோயாகும்.
- வேறெந்தத் தொற்று நோய் இறப்பையும் விட இதனால் இறப்பவர்கள் தொகை அதிகமாகும்.
- ஆண்டு தோறும் உலகில் 8 மில்லியன் மக்கள் காசநோயினால் பீடிக்கப்படுகின்றனர். இந்தத் தொகையில் 95வீதம் சமூக பொருளாதார தாழ்நிலை வளர்முக நாட்டவராவார்.
- HIV தொற்றுக்குள்ளானவர்களுக்கு காசநோய் ஏற்படும் வாய்ப்பு ஏனையவர்களைவிட 30 மடங்கு அதிகமாகும்.
- இந்த நோய்த் தொற்றுக்குள்ளாவோரின் 10 வீதமானோர் நோயாளி ஆகின்றனர்.

**தாயகப் பிரதேசங்களில் புதிதாக இனங்காணப்பட்ட காச நோயாளிகள்**

| இடம் | 2004 | 2005 |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 231 | 332 |
| திருகோணமலை | 180 | 107 |
| மட்டக்களப்பு | 278 | 214 |
| கிளிநொச்சி | 23 | 31 |
| முல்லைத்தீவு | 19 | 25 |
| வவுனியா | 52 | 19 |
| மன்னார் | 51 | 59 |
| அம்பாறை | - | - |

ஆண்டு தோறும் எமது தாயகப் பிரதேசங்களில் 100 வரையான காசநோய் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றது. இதில் 75வீதமானோர் 15 முதல் 55 வயது வரையினர் இந்த உயிரிழப்புக்குப் பலியாகின்றனர்.

**காசநோய் பரவக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை?**

- நுரையீரல் காசநோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் தும்மும் போதும், இருமும் போதும் அல்லது பலமாக சிரிக்கும் போதும் வெளியாகும் எச்சில் (சளி) சிறிய கண்ணுக்குப் புலப்படாத பாதகமான பக்ரீறியாக்கள் காற்றுடன் கலந்து விடுகின்றன. இதனை வேறொருவர் சுவாசிக்கின்ற போது இந்த நோய்த் தொற்று ஏற்படுகின்றது.
- சூரிய ஒளி, காற்றோட்டம் குறைந்த கூடாரங்களில், அறைகளில் வாழ்ந்து வருவோர் தொற்றடையும் வாய்ப்பு அதிகம். சூரிய ஒளியின் ஊதா கடந்த கதிரால் இந்த கிருமி அழியும்.

**காசநோய் எப்படிப்பட்டோரை இலகுவாக தாக்கும்?**

- நீர்ப்பீடன தொகுதியில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைகின்ற போது.
- கட்டுப்படா நீரிழிவு நோயாளி.
- H.I.V தொற்றுக்குள்ளாகியிருப்போர்.
- ஸ்டிரோய்ட் (Steroid) வகை மருந்துகளை கட்டுப்பாடின்றி உட்கொள்வோர்.
- போசனக் குறைபாடு (புரத உணவை போதியதாய் சேர்க்காதோர்).
- மது, போதைபொருள், புகைத்தல் அடிமைகள்.

**நோய் அறிகுறிகள் எப்படி இருக்கும்?**

- மூன்று வாரங்களுக்கு மேற்பட்ட இருமல் காணப்படல்.
- உணவில் விருப்பமின்மை.
- உடல் நிறை குறைதல்.
- இரவில் வியர்த்தல்.
- இரவில் மெல்லிய காய்ச்சல் இருத்தல்.
- சளியுடன் இரத்தம் வெளியேறல்.

(மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் எதுவுமே காச நோய்க்கு மாத்திரமே உரித்தானவையல்ல. எனவே இந்த நோய் அறிகுறிகள் உள்ள ஒருவர் மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்வதே சிறந்தது)

**இதனை எவ்வாறு பரிசோதித்து அறியலாம்?**

- சளிப்படலப் பரிசோதனை :- சளியைச் சாயமூட்டி நுணுக்குக் காட்டியில் அவதானிப்பதால் இந்தக் கிருமிகளைக் கண்டுபிடிக்க முடியும். இது மிகவும் வெற்றிகரமானதும், இலகுவானதும், செலவு குறைவானதுமாகும்.
- எக்ஸ் கதிர் (X-Ray) மூலம் நெஞ்சுப்பகுதியைப் படம் எடுப்பதாலும் உறுதிப்படுத்தலாம்.
- குருதிப் பரிசோதனை.
- மாண்டு (Mantoux) பரிசோதனை.

**காசநோய்க்கான சிகிச்சை எவ்வாறானது?**

- காசநோய்க் கிருமிகளை அழிக்கக் கூடிய சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.
- நோயாளியின் தன்மையைப் பொறுத்து அவர் சிகிச்சை பெற வேண்டிய காலஎல்லையை வைத்தியர் தீர்மானிப்பார்.
- சரியான மருந்து மாத்திரைகளை சரியான காலப்பகுதியில் சரியான முறையில் தொடர்ந்து பயன்படுத்தினால் நோயைப் பூரணமாகக் கட்டுப்படுத்தலாம்.
- ஒழுங்கற்ற மருந்துப்பாவனையால் மருந்துக்கெதிராக கிருமிகள் வீரியம் பெற்றுவிடும், இதனை பல் வகை மருந்து எதிர்ப்பு காசநோய் Multi Drug Risistant (MDR )- TB என்பர்.

**நேரடிக் கண்காணிப்புச் சிகிச்சைமுறை DOTS-Directiy Observed Treatment Short Course**

- ஒழுங்கான சிகிச்சை நேரடியாகக் கண்காணிக்கப்படல்.
- நோயாளியைக் கண்காணித்து சிகிச்சையைக் கைவிடுபவர்களை உடனடியாக இனங்கண்டு சிகிச்சையைத் தொடரவைத்தல்.
- நோயாளி சிகிச்சை பெறும் காலகட்டத்தில் முகங்கொடுக்கும் சிக்கல்களை இனங்காண உதவும்.

**காசநோய் மருந்துகளின் பக்க விளைவுகள் எவை?**

- தோலில் கொப்பளங்களும் அரிப்பும்.
- வாந்தி அல்லது குமட்டல்.
- கண்கள் மஞ்சள் நிறமாக மாறல்.
- நிறப்பார்வை தெளிவின்மை.

(மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடியாக வைத்திய ஆலோசனை பெறப்பட வேண்டும். இந்தக் காலப்பகுதியில் ஒவ்வாமை உணவுகளை தவிர்க்க வேண்டும்.)

**எவ்வாறு நோய் பரவுவதைத் தடுக்க முடியும்?**

- சரியான சிகிச்சை முறையைக் கடைப்பிடித்து நோயிலிருந்து பூரண சுகம் பெற்றுக்கொள்வதனூடாக நோய்க் கிருமி பரவுவதைத் தடுக்கலாம்.
- இருமும் போது, தும்மும் போதும் மூக்கு, வாய்ப்பகுதியை துணியால் மறைத்துக் கொள்ளல்.
- கண்ட இடத்தில் எச்சில், சளி என்பனவற்றை துப்புவதைத் தவிர்த்து அதனைச் சேகரித்து எரித்தல் அல்லது புதைத்தல்.
- சுத்தமான காற்றோட்டமுள்ளதும் சூரிய ஒளி படக்கூடியதுமான அறையில் வசித்தல்.

எனவே,அனைவரும் காச நோய் பற்றிய பூரணமான தெளிவு பெற வேண்டும். அனைவரும் ஒன்றுபட்டுக் கொடிய காசநோயை எமது மண்ணிலிருந்து விரட்டியடித்துவிட ஒத்துழைக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

**டொக்டர்,ரி.வாமன்
தமிழீழ சுகாதார
சேவைகள்
கிளிநொச்சி.**

# தமிழக மக்களின் நலன் கருதி விஜயகாந்த் அ.தி.மு.க கூட்டணியில் இணையவேண்டும்

## காங்கிரஸ் முன்னாள் எம்.எல்.ஏ. கிருஷ்ணவேணி வேண்டுகோள்

சென்னை—

விஜயகாந்த் தமிழக மக்க ளின் நலன்கருதி அ.தி.மு.க கூட்டணியில் இணையவேண்டு மென காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.எல். ஏ. கிருஷ்ணவேணி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக் கையில் -

இப்போதுள்ள இரண்டு கூட்டணிகளில் தி. மு.க. அணித் தலைவர் கருணாநிதி மீது மரி யாதை வைத்து தனது திருமணத்தை நடத்தித் தர விஜயகாந்த், கருணாநிதியைக் கேட்டுக் கொண்டார். அதன்படியே திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. அன்றைய கருணாநிதி, தைரி யமாக முடிவெடுத்த பழைய முதல்வர். ஆனால், இப்போது தனது குடும்பத்தின் பிடியிலும், ராம தாஸ் போன்றவர்கள் ஆட்டிப்படைக்கும் நிலை யிலுள்ள கருணாநிதியாக உள்ளார். இந்தக் கூட் டணியிலுள்ள காங்கிரஸ் - காமராஜர், விஜய காந்த், என்போன்றவர்கள் இருந்த பழைய காங்கிரஸ் அல்ல.

சுயநலத்திற்காக, பதவிக்காக யாருடனும் துணை போகின்ற காங்கிரஸ்காரர்கள்தான் இன்றுள்ளனர். வீண் ஜம்பம் பேசும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும், சில ஜாதிக் கட்சிகளும் அந்தக் கூட்டணியில் உள்ளன.

இவர்களின் கெடுபிடியால் கருணாநிதி 126 தொகுதிகளில் மட்டும் போட்டியிடும் தி.மு.க நிச்சயம் தனித்து ஆட்சியைப் பிடிக்க முடியாது.

அதேசமயம் முதல்வர் ஜெயலலிதா, கடந்த 5 ஆண்டுகளில் எல்லா தரப்பு மக்களையும் திருப்திப்படுத்தியுள்ளார். விஜயகாந்த் செய்ய நினைக்கும் திட்டங்களில் பலவற்றைச் செயற் படுத்தியுள்ளார். ஆகவே, தே.மு.தி.க தனித்து போட்டியிட்டு வாக்குகளைச் சிதறடித்து சுயநல வாதிகளுக்கு சாதகமாக அமைந்துவிட காரண மாக இருக்க வேண்டாம்.

வைகோ, திருமாவளவன் போன்று அ.தி. மு.க, கூட்டணிக்கு தே.மு.தி.க ஆதரவு கொடுத்து நல்லாட்சி மீண்டும் அமையவும், ஜெயலலிதா மீண்டும் முதல்வராக, தே.மு.தி. கவின் லட்சியங்களைச் செயற்படுத்த விஜய காந்த் முன்வரவேண்டும்.

உங்கள் தாய் என்ற ஸ்தானத்திலிருந்து இதனை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் போட்டியிடும் தொகுதிகள் அறிவிப்பு



சென்னை—

திராவிட முன்னேற்றக்கழகம் தலைமையி லான கூட்டணிக் கட்சிகள் போட்டியிடும் தொகுதி களின் விபரத்தை நேற்று முன்தினம் கலைஞர் அறிவித்த நிலையில் - நேற்று அ.தி.மு.க. தலை மையிலான கூட்டணிக் கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளின் விபரத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

இதன்படி ம.தி.மு.க. மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் போட்டியிடும் தொகுதிகளின் விபரம் வருமாறு -

**ம.தி.மு.க.**


துறைமுகம், பெரம்பூர்-தனி, எழும்பூர்-தனி, அண்ணாநகர், தாம்பரம், பூந்தமல்லி, திருப்பத்தூர் (வேலூர்), வேலூர், செஞ்சி, நெல் லிக்குப்பம், குறிஞ்சிப்பாடி, தர்மபுரி, தாரமங் கலம், கபிலர்மலை, தொண்டாமுத்தூர், வெள் ளக்கோவில், திருப்பூர், சத்தியமங்கலம், கம்பம், திருமங்கலம், மதுரை கிழக்கு, திண்டுக்கல், அர வாக்குறிச்சி, தொட்டியம், திருச்சி 1, மயிலாடு துறை, பட்டுக்கோட்டை, சிவகங்கை, ராமநாத புரம், விருதுநகர், சிவகாசி, வாசுதேவநல்லூர் - தனி, தென்காசி, சாத்தான்குளம், நாகர் கோவில்.

**விடுதலைச் சிறுத்தைகள்**

சிறிபெரும்புதூர், முகையூர், செங்கம் - தனி, உளுந்தூர்பேட்டை-தனி, காட்டுமன்னார் கோவில்-தனி, மங்களூர்-தனி, அரூர்-தனி, வால் பாறை-தனி, சீர்காழி-தனி.

# மக்களுக்கு நன்மை செய்யவே கட்சியைத் தொடங்கினேன்!

## விஜயகாந்த் தெரிவிப்பு



வேலூர்—

மக்களுக்கு நல்லது செய்யவே அரசியல் கட்சியைத் தொடக்கியுள் ளேன் என வேலூரில் நடிகர் விஜயகாந்த் தெரிவித்தார்.

வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்ததாவது -

மக்களுக்கு நன்மை செய்யவே நான் அரசியல் கட்சியைத் தொடங்கி னேன். எந்தக் கட்சியுடனும் கூட்டணி இல்லை. சுதந்திரம் அடைந்து 59 ஆண்டுகளாகியும் கிராமப்புறங்களில் பெண்களுக்கு என்று தனி கழி வறை இல்லை. தரமான நிவாரணப்பொருட்கள் கொடுப்பதில்லை. கல்வி வியாபாரமாகி விட்டது.

பணத்துக்காக கட்சியைத்தொடக்கவில்லை. மக்களுக்கு நன்மை செய்யவே கட்சியைத் தொடக் கியுள்ளேன். நான் இப்போது சினிமாவில் நடிக்காமல் இருப்பதால் எனக்குப்பல கோடி நட்டம் ஏற்பட் டுள்ளது. நான் சினிமாவில் நடிப்பது போலவே நிஜவாழ்விலும் நடக்கிறேன்.

என் கட்சியை உடைக்கப்பார்க்கின்றனர். மக்கள் மனதிலிருந்து என்னை அழிக்க முடியாது. நான் யாருக்கும் விலை போகமாட்டேன். மக்கள் என் பக்கம் தான் உள்ளனர் என விஜயகாந்த் தெரிவித்தார்.

# தேர்தலில் யாருக்கு ஆதரவு? ரஜினி தீவிர ஆலோசனை!



சென்னை—

தேர்தலில் ரஜினிகாந்த் யாரை ஆதரிப்பார் என்ற பரபரப்பான சூழ்நிலையில் - அவர் தனது ரசிகர்மன்றப் பொறுப்பாளர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

நடிகர் ரஜினி அரசியலில் இல்லையென்றா லும் கூட தமிழகத்தில் நடைபெறும் தேர்தல்க ளில் அவருடைய பங்கு என்ன என்பதை அரசி யல் கட்சிகளும், பொதுமக்களும் கூர்ந்து கவ னிக்கிறார்கள்.

நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் ரஜினிகாந்தின் ஆதரவு யாருக்கு? என்பது கேள் விக்குறியாக இருக்கிறது. சத்திய நாராயணா வின் அறிக்கைக்கு பெரும்பாலான ரஜினி ரசிகர் கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். இந்தத் தேர்தலில் ரஜினியின் நிலை என்ன? என்பதை பகிரங்க மாக அறிவிக்கக் கோரி தமிழ்நாடு முழுவதும் ரசிகர்கள் சுவரொட்டிகளை ஒட்டியிருக்கிறார்கள்.

இதற்கு ரஜினி காந்த் ஆதரவும் தெரிவிக்க வில்லை. எதிர்ப் பும் தெரிவிக்க வில்லை. அவர் இப்போது சிவாஜி படப்பிடிப்பில் கலந்து கொண்டு நடித்து வருகிறார். 2 நாட்களுக்கு முன்பு ரஜினி சிவாஜி படப் பிடிப்பை முடித்துக் கொண்டு அவருக்கு சொந்த மான ராகவேந்திரா திருமண மண்டபத்துக்கு வந்தார். அங்கு ரசிகர் மன்றப் பொறுப்பாளர் சத்திய நாராயணா மற்றும் நெருக்கமான நண் பர்களுடன் ஆலோசனை நடத்தி அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

இதற்கிடையில் சென்னை திருவொற்றியூ ரில் நடந்த அ.தி.மு.க பொதுக்கூட்டத்தில் பேசிய நடிகர் விஜயகுமார் - ரஜினிகாந்த் விரைவில் முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்து பேசு வார் என்று கூறினார்.

# உலக அரங்கில்

## ஈராக்கில் தாக்குதல் 30 பேர் உயிரிழப்பு

பாக்தாத்—

ஈராக்கில் இடம்பெற்ற இருவேறு தாக்குதல்க ளில் 30 பேர் கொல்லப்பட்டதாகவும், இதில் பெருமளவானோர் பொலிஸாரெனவும் தகவல் கள் தெரிவிக்கின்றன.


தலைநகர் பாக்தாத்தில் தற்கொலைக் குண்டுதாரி தான், செலுத்திவந்த காரை வெடிக்க வைத்ததில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

மற்றொரு சம்பவம், தென்மேற்கு நகரில் இடம்பெற்றது இதில் ஐவர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை, வீதியோரமாக இடம்பெற்ற குண்டுவெடிப்பில் மேலும் 3 பொலிஸார் உயிரி ழந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக்கில் அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு




வொஷிங்டன்—

ஈராக்கை ஐக்கியப்படுத்துவதற்காக அந்த நாட்டுத் தலைவர்கள் இணைந்து அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

ஈராக்கில் தேர்தல் நடந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், அங்குள்ள அரசியற் கட்சிகளிடையே பிரதமராக ஒருவரை நியமிப் பதற்கு இதுவரை எவ்வித இணக்கமும் காணப் படாத நிலையிலேயே ஜனாதிபதி புஷ் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அத்துடன், ஈராக் குறித்து அமெரிக்கர்கள் மிகவும் ஆழ்ந்த அக்கறையுடன் இருப்பதையும் தான் உணர்ந்து கொள்வதாகவும் அவர் தெரி வித்தார்.

## எமது நிலைப்பாட்டை ஹமாஸ் ஏற்க வேண்டும்!

### பலஸ்தீன விடுதலை இயக்கம்



காஸா—

பலஸ்தீனர்க ளுக்கு உயர் தலைவர் ஒருவர் இருப்பதென்ற பலஸ்தீன விடு தலை இயக்கத் தால் ஏற்படுத்தப் பட்ட நிலைப் பாட்டை ஹமாஸ் அமைப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென பலஸ்தீன விடுதலைஇயக்கம் தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த வேண்டுகோளை நிராகரித் துள்ள ஹமாஸ் அமைப்பின் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்படவுள்ள மஃமூட் சகார் இந்த நேரத்தில் எவரும் எமக்கு வேண்டுகோள் விடுக்க முடியாதெனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு பத்திரிகை தமிழ் கலை, இலக்கிய ஊடக நண்பர்கள் அமைப்புடன் இணைந்து நடத்தும்

எழுத்தாளர் செம்பியன் செல்வன் நினைவு சிறுகதைப் போட்டி

- ☆ சிறுகதைகள் சமகால வாழ்வியலை சித்தரிப்பவையாக அமைதல் வேண்டும்.
- ☆ ஏற்கனவே பிரசுரமான கதைகளாகவோ, பிரசுரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டவை யாகவோ இருக்கக் கூடாது.
- ☆ புனைபெயரில் எழுதுபவர்கள் தங்கள் சொந்தப் பெயர், முகவரியை தெளிவாக தனி யான தாளில் குறிப்பிடல் வேண்டும்.
- ☆ சிறுகதைகள் தாளின் ஒரு பக்கத்தில் கையெழுத்துப் பிரதியாயின் 8 பக்கங்களுக்கும், தட்டச்சு பிரதியாயின் 4 பக்கங்களுக்கும் மேற்படலாகாது.

முதல் மூன்று இடங்களைப் பெறும் சிறுகதைகளுக்கு முறையே ரூபா 5000, 3000, 2000 பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

பரிசு பெற்ற கதைகளோடு மேலும் ஐந்து சிறந்த கதைகள் நமது ஈழநாடு பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். உங்கள் சிறுகதைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள் - 30.04.2006

அனுப்பவேண்டிய முகவரி:-

எழுத்தாளர் செம்பியன் செல்வன்
நினைவு சிறுகதைப் போட்டி,
பிரதம ஆசிரியர், நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## பொதுச் சாதாரண பரீட்சை விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01) 2 | 16) 4 | 31) 1 | 46) 1 |
| 02) 2 | 17) 2 | 32) 2 | 47) 1 |
| 03) 1 | 18) 3 | 33) 2 | 48) சரி |
| 04) 4 | 19) 1 | 34) 3 | 49) கூறமுடியாது |
| 05) 3 | 20) 1 | 35) 4 | 50) கூறமுடியாது |
| 06) 4 | 21) 4 | 36) 2 | 51) சரி |
| 07) 2 | 22) 2 | 37) 4 | 52) சரி |
| 08) 4 | 23) 3 | 38) 1 | 53) FRPSXWHU |
| 09) 3 | 24) 2 | 39) 3 | 54) DGULO |
| 10) 4 | 25) 2 | 40) 2 | 55) MDIIQD |
| 11) 2 | 26) 2 | 41) 2 | 56) A |
| 12) 1 | 27) 3 | 42) 1 | 57) D |
| 13) 2 | 28) 2 | 43) 4 | 58) B |
| 14) 1 | 29) 3 | 44) 1 | 59) D |
| 15) 2 | 30) 1 | 45) 2 | 60) B |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## இனிமேலும் அடக்கு...

சமாதானத்தின்மூலம் போரை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற நோக்கத்திலேயே பேச்சுக்களில் பங்கு கொண்டோம்.

ஆனால், அரசும் அதன் படைகளும் அப்படிச்செயற்படாமல் தமிழ் மக்கள்மீது தொடர்ச்சியாக ஒடுக்கு முறைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதனால் நாம் பொறுமையின் எல்லைக்குத் தள்ளப்பட்டோம்.

அமைதிவழியில் தீர்வுகாணலாம் என்றுதான் அரசாங்கத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம்.

இதன்மூலம் போரை நிறுத்துவது மட்டுமல்ல- தமிழர் தாயகத்தில் ஆக்கிரமித்து நிற்கும் படைகளை படிப்படியாக விலக்கி, இடம்பெயர்ந்த எமது மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்தலாம் என்று எண்ணினோம். ஆனால், அரச படையினர் இதனைக் கவனத்தில் எடுக்கவில்லை.

இதனால் அரசு மீதான நம்பிக்கையை நாம் இழந்துவிட்டு பொறுமையின் எல்லையில் நிற்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## உயர் தொழில்நுட்ப ...

புலிக்கொடியை இறக்குமாறு மாணவர்களை அச்சுறுத்தியதுடன் தாக்க முற்பட்டனர்.

படையினர் குண்டாந்தடிகளுடனும், ஆயுதங்களுடனும் வளாகத்தில் நுழைந்து மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டபோது படையினருக்கும், மாணவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதையடுத்து படையினர் உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத் தலைவர் உட்பட 15 இற்கும் மேற்பட்ட மாணவர்களை மிகவும் மோசமான முறையில் தாக்கிக் காயப்படுத்தியதுடன், அங்கு வைக்கப்பட்டிருந்த அன்னை பூபதியின் திருவுருப்படத்தை அடித்து நொருக்கினர். மேலும், வகுப்பறையில் இருந்த தளபாடங்கள், யன்னல் கண்ணாடி என்பனவற்றையும் தாக்கி சேதப்படுத்தினர்.

இதேவேளை, சம்பவ இடத்துக்கு வந்த கண்காணிப்புக் குழுவினர் மாணவர்களையும், படையினரையும் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு கூடிநின்ற மாணவர்களை படையினர் படம் பிடித்தபோது மாணவர்களுக்கும், படையினருக்கும் மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டது. படையினர் கொடியை இறக்குமாறு மாணவர்களை அச்சுறுத்தினர். மாணவர்களும் படையினரின் செயற்பாட்டை படம்பிடித்தனர். அப்போது படையினர், ஏற்றப்பட்ட புலிக்கொடியை கம்பத்துடன் பிடுங்கிக்கொண்டு தமது கவச வாகனத்தினுள் போட்டனர்.

இதேவேளை, வாகனங்களில் பெருமளவு படையினர் பலாலி வீதியில் குவிக்கப்பட்டிருந்ததால், அந்த வீதியூடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## போர்நிறுத்த ...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இந்த நிகழ்வில தொடர்ந்து உரையாற்றிய அவர்:-

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் விடுதலைப் புலிகளுக்கு சாதகமானவையாக அமைந்துள்ளன. இதனடிப்படையில் விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலும் தமது அரசியல் நடவடிக்கையை ஆரம்பிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் இராணுவத்தினரின் கருத்துக்குறித்து எவரும் கேட்கவில்லை. அப்படிக் கேட்டிருந்தால் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை இராணுவம் ஏற்றுக்கொண்டிருக்காது.

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு சவால் விடுக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜெனிவாப் பேச்சுவார்த்தையை அடுத்து இராணுவத்துக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் குறைந்துள்ளன. புலிகள் குற்றம்சாட்டுவது போல கருணா அணியுடனோ அல்லது எந்த விதமான ஆயுதம்தரித்த குழுவுடனோ எமக்குத் தொடர்புகள் இல்லை.

ஜெனிவாவில் பேச்சுக்கள் நடைபெறவுள்ள நிலையில் இருதரப்பும் யுத்தத்துக்கு தயாராகி வருகிறோம்.

விடுதலைப்புலிகள் தங்களது படைபலத்தை அதிகரிப்பது தொடர்பாக நாம் அறிவோம். அவர்கள் சமாதான முயற்சிகளில் எந்தளவு ஈடுபாட்டோடும் உள்ளனர் என்பது எமக்குத் தெரியாது. நாங்களும் படைபலத்தைக் கட்டமைத்து வருகிறோம்.

நாங்கள் ஒரு சட்டபூர்வமான இராணுவம் பயங்கரவாதிகளி[illegible]டைபலக் கட்டமைப்புக்களுக்கு[illegible]ங்களுக்கும் வேறுபாடு உண்டு. சிறார்படை சேர்ப்பை புலிகள் அதிகரித்து வருகின்றனர்.

## கொழும்பு...

பட்டியலுக்கமைய இந்தமுறை தேர்தல் நடத்தப்படவுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளரான சுபுன் லக்மால் 2005 ஆம் ஆண்டு தான் 18 வயதைப் பூர்த்தி செய்கிறார்.

18 வயது பூர்த்தியடையாத ஒருவரை வேட்பாளராக சேர்த்ததால் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பு மனுவை நிராகரிக்க தெரிவத்தாட்சி அலுவலர் எடுத்த தீர்மானம் சட்ட பூர்வமானது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிபதிகளான கே.சிறிபவன் மற்றும் சிசிர டி ஆப்ரோ ஆகியோர் இந்தத்தீர்ப்பை வழங்கினர்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யவுள்ளதாக அந்தக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

AIMS
Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
புதிய பிரிவுகள் ஆரம்பம் 26-03-2006
Diploma in
GNU/Linux Administration
- Redhat/Fedora/Mandrake Linux Installation
- Open Source world Introduction
- Open Source Software Installation & Configuration
- Fundamentals of Command Line Operations.
- Networking using Linux Environment

Linux யாருக்கு?
- NGO மற்றும் Open source software உபயோகிக்கும் அலுவலகங்களில் பணி புரிபவர்கள்.
- பல்கலைக்கழக மாணவர்கள்
- மற்றும் வேகமாக முன்னேறி வரும் Linux பற்றி அறிய விரும்பும் அனைவருக்கும்.

மேலதிக விபரங்களுக்கு
Dirictor, AIMS Jaffna ,
# 118,பலாலி வீதி ,தபாற்பெட்டி சந்தி ,
திருநெல்வேலி
Center for FOSS & LAMP

## கணக்காளர் கைதைக் கண்டித்து
## மாகாண சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் சுகவீனலீவுப் போராட்டம்

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அலுவலக பிரதம கணக்காளர் பரமேஸ்வரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திணைக்களத்தின் யாழ்.அலுவலக ஊழியர்கள் நேற்று சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் சுகவீனலீவுப் போராட்டம் காரணமாக அலுவலக பணிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன. அலுவலகம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண பணிப்பாளர் அலுவலக பிரதம கணக்காளர் பரமேஸ்வரன் திருகோணமலையில் அவரது அலுவலகத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சகல திணைக்களங்களும் இந்த சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி)

## சினைப்பர் துப்பாக்கி பாகங்களுடன் பிடிபட்ட இளைஞரிடம் விசாரணை!

கொழும்பு—

சினைப்பர் துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் பாகங்களை எடுத்து வந்த காங்கேசன்துறை இளைஞன் இரகசிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்ட சினைப்பர் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் பாகங்கள் - விடுதலைப் புலிகளிடம் கையளிக்கவே ஜேர்மனியிலிருந்து கொண்டுவரப்பட்டதாக இரகசிய பிரிவு பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சினைப்பர் துப்பாக்கியின் பாகங்கள் ஜேர்மனியில் தமிழர் ஒருவரால் தன்னிடம் கையளிக்கப்பட்டதாகவும், அதனை தான் கொழும்பில் மற்றொரு தமிழரிடம் கையளிக்க இருந்ததாகவும் கைதுசெய்யப்பட்ட இளைஞர் தெரிவித்தார்.

கண்டுபிடிக்கப்பட்ட பாகங்களில் தொலைநோக்கி, அதற்கென பயன்படுத்தப்படும் விளக்கு, தொலைவில் இருக்கும் நபரின் தூரத்தை அளப்பதற்கான கருவி, துப்பாக்கிச்சூட்டு பயிற்சியின்போது இலக்கை சரிவர கண்டுகொள்ள உதவும் கருவி மற்றும் சினைப்பருக்கு பயன்படுத்தப்படும் தொலைநோக்கியின் பாகங்கள் ஆகியன இருந்தன.

இந்தப் பொருட்களுடன் ஜேர்மனியிலிருந்து இலங்கை வந்த தமிழ் இளைஞர் கடந்த புதன்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அதன்பின்னர் அவர் விசாரணைகளுக்காக இரகசியப் பிரிவு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த இந்த இளைஞர் 10 வருடங்களுக்கு முன்னர் நெதர்லாந்துக்குச் சென்றவர் என்றும், தற்போது நெதர்லாந்து நாட்டின் குடியுரிமை பெற்றிருப்பவர் என்றும் தெரியவருகிறது.

எனினும் அந்த இளைஞர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக அந்தச் செய்தியில் தெரி விக்கப்பட்டுள்ளது.

## கறுப்புத்...

அதேவேளை, குடாநாட்டின் பல வீதிகள், முக்கியமான சந்திகளில் நிற்கும் படையினர் முகத்தை கறுப்புத் துணியால் மறைத்தவாறு கடமையில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. (வ)

## தமிழீழத்...

இருந்தும் அவர்கள் அதனை செயற்படுத்தவில்லை.

இலங்கை மக்கள் ஆட்சியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்துள்ளதால் இது குறித்து ஜனாதிபதி விவேகத்துடன் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமெனவும் தெரிவித்தார். (தே)

## திருமலையில்...

தாக்குதல்கள், சமாதான காலத்தைப் பயன்படுத்தி மீனவர்கள் கடலில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடைகள் போன்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு திருகோணமலை மாவட்ட பொங்குதமிழ் சமூகம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தது.

இதனையடுத்து நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன, பாடசாலைகள், அரச திணைக்களங்கள் மூடப்பட்டிருந்தன. திருகோணமலையின் உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களுக்கான அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம் பெறவில்லை.

நேற்றைய ஹர்த்தாலால் மக்கள் நடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாத வகையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் பெருமளவு குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. (04)

## படையினரின் ...

மேற்படி நிறுவன விரிவுரையாளர்கள், மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் நோக்குடன் உட்புகுந்து தாக்குதலை மேற்கொண்டமை. உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை.

தமிழ பேசும் மக்களால் தியாகி என பெருமதிப்பு கொடுக்கப்படும் அன்னைபூபதியின் நினைவுநிகழ்வை திட்டமிட்ட வகையில் குழப்ப முயன்றமை. அன்னை பூபதியின் சுவரொட்டி களையும் கிழித்தெறிந்தமை மூலமாக அவமதித்தமை.

மேற்படி நடவடிக்கைகள் மூலம் தமிழ் பேசும் மக்களது உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் செயற்பட்டமை.

படையினரது மக்கள் மீதான அத்துமீறல்கள் தொடர்கின்ற சமகாலச் சூழலில் - இவ்வகையான தாக்குதல்கள் இயல்பு நிலையை மென்மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் செயற்பட்டமை.

படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் யாவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டமையானது கவலைக்குரியதாகும்.

சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தை மீறுவதோடு போர்நிறுத்த உடன்படிக்கையின் முகவுரையின் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்படும் ஏற்பாட்டையும், சரத்து இரண்டின் உப விதிகள் 2;1, 2;2 ஆகியவற்றையும் படையினர் மீறியுள்ளனர் என்பதை தங்களின் கவனத்துக்கும், நடவடிக்கைக்குமாக முறைப்பாடாகத் தருகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - யாழ். மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் இணையம், யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

aat FINAL
விரிவுரைகள் ஆரம்பம்
26.03.2006 - 10.00 a.m
மேலதிக விபரங்களுக்கு :
CAREER.Com INSTITUTE
167,1st Cross st, Jaffna.
(வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)
T.P : 077 3039448,
077 3151510 [C/5170]

இதோ... 15 நாட்களில் நீங்களும் ஒரு சாதனையாளர்!
யாழ் ரெக் வழங்கும் 15 நாட்கள்
தொடர்ச்சியான டிப்ளோமா கற்கைநெறிகள்
DIPLOMA IN PHOTO DESIGN
DIPLOMA IN WEB DESIGN
DIPLOMA IN VIDEO & SOUND EDITING
DIPLOMA IN MULTIMEDIA
DIPLOMA IN 3D MODELING & ANIMATION
DIPLOMA IN HARDWARE

கொழும்பின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்...
10 பேர்கள் மட்டுமே ஒரு பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படுவர்
ஏப்ரல் 3ம் திகதி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.
கட்டணம் 3000/- மட்டுமே!
YTS
IT For Future
யாழ் ரெக்
இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி,
கலட்டிச்சந்தி

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் மசன் வேலைப் பயிற்சிநெறி இடம் பெறுகிறது

## காமைத்துவ உதவியாளர் இராகவன்

ப்பாணம் —

பாழ்.மாவட்டத்தில் உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஆரம் கப்பட்டுள்ள மேசன் பயிற்சி ிக்கு வடக்கு - கிழக்கு உலக வங் ன் வீடமைப்புத் திட்டம் முழுமை ன நிதியீட்டை தொழிற்துறைத் ணக்களம் மூலம் எமக்கு தந்துத ள்ளது. அந்தவகையிலே எமது ணக்களத்தால் நடைமுறைப் தப்படும் பயிற்சி நெறியில் இந்தப் ற்சி மூன்றாவதாகும். ஏற்கனவே ட்டு இடங்களில் மரவேலைப் ற்சி நெறிகளை ஆரம்பித்துள் ம் என யாழ்.மாவட்ட தொழிற் றத் திணைக்கள முகாமைத்துவ வியாளர் ப.இராகவன் தெரிவித்

சங்கானை அரசினர் இயந்திர கல நிலைய மண்டபத்தில் கடந்த ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப் . மேசன் பயிற்சி நெறி ஆரம்ப ாவில் தலைமைதாங்கி உரை ற்றும் போதே அவர் இவ்வாறு ிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகை -

இன்று இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள மேசன் பயிற்சி நெறிக்குரிய பயிற்சித் திட்டத்தை தேசிய ரீதியிலே அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி அதிகாரசபையினுடைய பயிற்சித் திட்டத்தின் கீழ் நாம் நடைமுறைப் படுத்தவுள்ளோம். அத்துடன் பயிற்சியாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு பயிற்சிக் காலத்தின் போது ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கவுள்ளோம். அத்துடன் பயற்சியின் முடிவில் பயிற்சியை நிறைவு செய்த பயிற்சியாளர்கள் அனைவருக்கும் தரமான சான்றிதழ்களையும் வழங்கவுள்ளோம்.

மேலும் பூரணமான பயிற்சி நெறியை முடிப்பவர்களுக்கு மேசன் தொழிலுக்குரிய உபகரணங்களை இலவசமாகவும் வழங்கவுள்ளோம் எனத் தெரிவித்தார். (48)

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் முதலுதவி நிலையம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம் —

இலங்கையில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆரம்பிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் பூர்த்தியடைவதையும், யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப். பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியடைவதையும் முன்னிட்டு நேற்றுமுன் தினம் பிற்பகல் 2 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் முதலாவது சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரதம தளபதி டொக்டர் ஜே.ஜீ.ஜெயதிலக முதலுதவி நிலையத்தை திறந்து வைத்தார்.

மற்றும் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஸ்ரீபன் ரைக், பியற் மாஸ், யாழ்.மாவட்ட ஆணையாளர் செ. செல்வரஞ்சன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (த,நி)




யாழ். மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவில் முதலாவது முதலுதவி நிலையத்தை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரதம தளபதி ஜே.ஜீ.ஜெயதிலக்க திறந்து வைப்பதையும், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளையும், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு மாணவர்களையும் படங்களில் காணலாம். (த,நி)

# ற்காலிக கொட்டகைகளின்றி ஆலயத்தில் பக்தர்கள் அவதி

டுவில் —

மட்டுவில் பன்றித்தலைச்சி அம் ன் ஆலய முதலாம் பங்குனித் திங் பொங்கல் விழா சிறப்பாக நடந்து ந்துள்ளது. உள்ளூரிலும், வெளி ரிலும் இருந்து வந்த பக்தர்களால் லய வளாகம் நிறைந்து காணப் டது. அடியார்களுக்கு உரிய ாக்குவரத்து, குடிநீர் உள்ளிட்ட சதிகள் செய்யப்பட்டிருந்தன.

பெருமளவு அடியார் கூட்டம் ந்த போதிலும், திருட்டுச் சம்பவங் எதுவும் இடம் பெற்றதாகத் ரியவில்லை.

இதேவேளை, கடும் வெயில் கார மாக ஒதுங்கியிருந்து இளைப் றுவதற்கு நிழல் மரங்களோ, தற்காலிக நிழற் கொட்டகைகளோ இல்லாமையால் பக்தர்கள் திண்டாடியதையும் காணமுடிந்தது.

ஆலயவீதிகளிலோ அல்லது சுற்றுப் புறங்களிலோ தற்காலிக நிழற் கொட்டகைகள் அமைத்து அடியவர்கள் தங்கி இளைப்பாறுவதற்கும், பொங்கல் ஆற அமர இருந்து உண்பதற்கும் வசதி செய்து கொடுக்கப் படல் வேண்டும் என அங்கு கூடிய அடியவர்கள் தெரிவித்தனர்.

ஆலய நிர்வாகத்தினரோ அல்லது தொண்டு நிறுவனங்களோ அல்லது ஊர்மக்களோ இதனைச் செய்வது சிறந்ததாக இருக்கும் எனவும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (24)

# வைத்தீஸ்வரா கல்லூரியில் ஆங்கில பாசறைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

யாழ்.வைத்தீஸ்வராக் .கல்லூரியின் வெளிச்சவீடு - பாடசாலை அலகு மாணவர்களுக்கான ஆங்கில பாசறை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

நாளை மு.ப 8.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஒரு நாள் பாசறையில் 6 பாடசாலைகளின் 6,7 ஆம் வகுப்புக்களைச் சேர்ந்த நூறு மாணவர்கள் கலந்து பயன் பெறவுள்ளனர்.

மாணவர்கள் தமது ஆங்கில மொழி கற்றலை பாடல்கள், கதைகள், மொழி விளையாட்டுக்கள் ஊடே மேற்கொள்வதற்கும், சுய ஆக்க வெளிப்பாட்டிற்கும் இந்தப் பாசறை வழிசெய்யும்.

ஒவ்வொரு கற்றல் முயற்சியிலும் சிறந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, பாசறையின் இறுதியில் இடம் பெறவுள்ள பரிசளிப்பு விழாவின் போது பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஆர்வமுள்ள பெற்றோர்கள், ஆங்கில ஆசிரியர்கள் இந்தப் பாசறையைக் கண்டு பயன்பெற முடியும் என அதிபர் ந.வன்னியசிங்கம் அறிவித்துள்ளார்.

# கரவெட்டிப் பிரதேச அபிவிருத்திக் கூட்டம்

வெட்டி —

கரவெட்டிப் பிரதேசத்தின் அபி ருத்தி தொடர்பான கூட்டம் எதிர் நம் 30 ஆம் திகதி மு.ப.10 மணி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் .கணேஷ் தலைமையில் செயலக நாட்டு மண்டபத்தில் நடைபெற ள்ளது. இந்தக் கூட்டத்தில் யாழ். வட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நம் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் எமது பிரதேசத்துக்குட்பட்ட ணைக்களங்களால் செய்யப்பட வண்டிய அபிவிருத்தி வேலைத் டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

திணைக்களங்கள் செய்ய வேண்டியிருக்கும் எமது பிரதேசத்துக்குட்பட்ட அனைத்து வேலைகள் அடங்கிய அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகளையும், வேலையை அமுல்படுத்துவதில் திணைக்களம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைப்படும் வசதிகள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்பாக எமது அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்

# பிறப்பு,இறப்பு பதிவுகளுக்காக அலைந்து திரியும் மக்கள்

ாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் இறப்பு, றப்பு பதிவுச் சான்றிதழ் பெறுவதில் க்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளை திர்நோக்குகின்றனர்.

தேடுதலுக்காக தேவைப்படும் ணத்தொகையை முத்திரையாக ட்டி யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பும்போது, அங்கு குறித்த பதிவு சதமடைந்திருந்தால் சேதமடைந் ுள்ளது என பதிலிடுகின்றார்கள். ஆனால், கொழும்பில் இருக்கும் லைமை பதிவாளர் அலுவலகத்தில் தடுதலை மேற்கொள்வதில்லை. ாழ்.செயலகத்தில் மட்டும் தேடுத லைச் செய்துவிட்டு பதிலளிப்பது மக் ளை அலைக்கழிப்பதாகவுள்ளது.

இது குறித்து யாழ்.செயலக பதிவு அதிகாரியை தொலைபேசியில் தாடர்பு கொண்டு கேட்டபோது தாம் ூன்று மாதத்துக்குள் பெற்று கொடுப் போம் என்றும் ஆனால் மக்களின் தேவைக்கேற்ப அவர்கள் தான் பெறுதல் நல்லது என்றார். இவ்வாறான பதில் ஒரு அதிகாரியின் சரியான பதில் அல்ல. குறித்த பதிவு சான்றுதழுக்காக முத்திரை ஒட்டி அனுப்பும் போது ஒரு செலவும், பின்னர் கொழும்பில் பெற முத்திரை ஒட்டுவது பிறிதொரு செலவுமாகும். இதனால் விரயமாகி போவது மக்களின் பணமும், நேரமும் தான்.

எனவே, தேடுதலை மேற்கொள்ளும் ஒரு பதிவுக்கு அந்தப் பதிவு யாழ்ப்பாணத்தில் சேதமடைந்து காணப்பட்டால், உடனே கொழும்புக்கு அனுப்பி அதன் பெறுபேற்றை உரியவர் பெற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என மக்கள் எதிர் பார்க்கின்றனர். இதை விட்டு அதிகாரிகள் ஏனோ தானோ என கடமையை மேற்கொள்ளக் கூடாது என மக்கள் விசனம் தெரிவித்தனர். (110)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை மூன்று



பெயர் : கி.பிரணவி
முகவரி : நெடுந்தீவு.

### அகவை ஒன்பது



பெயர் : தி.சர்மி
முகவரி : கட்டுடை.




# இடைத்தங்கல் முகாம்களில் பெண்கள் எதிர்நோக்கும் புதிய பிரச்சினைகள்

வடமராட்சி —

சுனாமியால் பாதிக்கப்பட்டு குடத்தனை இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள பெண்கள் புதிய பல பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடைத்தங்கல் முகாம்களிலுள்ள மக்களுக்கான மலசலகூட வசதிகள் மிகக் குறைந்தளவிலேயே உள்ளதுடன், தொண்டு நிறுவனங்களால் தற்காலிகமாக தகரங்களாலே மலசலகூடங் கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் இங்கே வாழும் பெண்கள் புதிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மற்றும் இடைத்தங்கல் முகாம்களை அண்டிய பகுதிகளிலும் இராணுவத்தினர் நிற்பதாலும் பெருஞ்சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, கடந்த பலமாதங்களாக மலசலகூடம், கிணறு போன்றவற்றை சுகாதார அதிகாரிகள் பார்வையிட்டு, சுத்தம் செய்யப்படாததால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டு, தொற்று நோய்கள் ஏற்படும் சாத்தியங்கள் உருவாக்கியுள்ளதாகவும் அந்தப் பகுதிமக்கள் தெரிவித்தனர். (101)

# தவக்கால நற்சிந்தனை



இன்று அன்னை மரியாளின் மங்கள வார்த்தைத்தினம்.

அதாவது கிறீஸ்து பிறப்பு அறிவிப்புத்தினம். தவக்காலத்திலே அன்னை மரியாளின் விழா குறுக்கிடுவது ஒரு மாபெரும் பொருத்தமாகும். காரணம் இந்த விழா எமக்கு பெரும் உண்மையையும் உணர்த்துகின்றது. அது என்னவென்றால், நாம் பாவத்திற்கு அடிமையானோம். ஆனால், மரியாளோ பாவமாசு இன்றிப் பிறந்தாள். அந்தப் பரிசுத்தமான பிறப்பு நிலையைப் பழுதின்றிக்காத்தாள்.

இறை சித்தத்திற்கு ஏற்புடைய வாழ்க்கை வாழ்ந்தாள். ஆண்டவரின் அடிமை நான் என்று தன்னைத் தாமே முழுமையாக அவருக்கு அர்ப்பணித்தாள். அத்துடன் இறைசித்தத்துக்கு ஏற்றவிதத்தில் வழி நடந்தாள். இவை இரண்டும் எமக்கு பாடமாக, வாழ்வின் மையமாக, குறிக்கோளாக மாறவேண்டும். மாற்ற வேண்டும். நமக்கு சோதனைகளும், வேதனைகளும், சந்தேகங்களும் வரலாம். இடர்கள், இழப்புக்கள், இன்னல்கள் தொடரலாம். இவை அனைத்தையும் இறைவன் விட்ட, தந்த வழிகள் என்று மனங்கோணாது நாமும் நம்மை இறைசித்தத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும். மரியன்னையை நாம் இதில் கண்டு பாவிக்க வேண்டும். முன்னெடுக்கவேண்டும். அவள் ஆசீர் வேண்டி இந்தத் தவக்காலத்தைப் பயனுள்ள காலமாக மாற்றவேண்டும்.

மோ.தார்சீசியஸ்

## மன்னார் மலர்விழி பயிற்சி பாசறையில் பயிற்சியை முடித்த அணி வெளியேற்றம்

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் இரண்டாம் லெப்டினன்ட் மலர் விழி பயிற்சிப் பாசறையில் பயிற்சியை நிறைவு செய்த முதலாவது மகளிர் மக்கள் கட்டுமான அணியினர் கடந்த வியாழக்கிழமை வெளியேறினர்.

பயிற்சியாசிரியர்களில் ஒருவரான சுபா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -பொதுச்சுடரை மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவரசி ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை தளபதி மகேந்தி ஏற்றி வைத்தார். 2ஆம் லெப்டினன்ட் மலர்விழியின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை அவரின் தந்தையாரான வில்வராஜா ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தளபதி மகேந்தி, மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவரசி ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் பயிற்சியை நிறைவு செய்தோருக்கிடையில் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்புட்டனர். இந்தப் பயிற்சி அணியில் 100 பேர் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பூ)

## சுயதொழில் முயற்சிக்கு பெண்களுக்கு கடன் வழங்கல்!

வட்டக்கச்சி—

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை பெண்களுக்கான சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்கப்பட்டது.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் ஜீவனோபாயத்திட்டத்தின்கீழ் மாவட்டப் பணிப்பாளர் மா.செல்வி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நான்கு பெண்களுக்கு 18 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களும், 2000 ரூபா பணமும் வழங்கப்பட்டது. தைப்பதற்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கே பணம் வழங்கப்பட்டது.

அத்துடன் இரண்டு பெண்களுக்கு மிக்சர் மற்றும் இடியப்ப உரல் செய்வதற்கெனவும் தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர்கள், பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9)

## வடக்கு - கிழக்கை பிரிக்க முற்பட்டால் தமிழர்கள் தக்கபாடம் புகட்டுவார்கள்

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

மன்னார் —

வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களின் உயிர் மூச்சு. இதனைப் பிரிப்பதற்கு எவராவது முனைந்தால், தமிழ்மக்கள் தக்க பாடம் புகட்டுவார்களென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.


நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினரது மன்னார் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கையும் - கிழக்கையும் தனித்தனியே பிரிக்க வேண்டும் என்பது காலம் கடந்த சிந்தனை தவிர அது ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலத்திலேயே நிகழ்ந்திருக்க வேண்டும். எனவே, வடக்கோடு இணைந்த கிழக்கு எமது பாரம்பரிய தாயக தேசம். எனவே, அதைவிட்டுக் கொடுக்க முடியாது என எமது தேசியத் தலைவர் அன்றைய காலப் பகுதியிலேயே கூறியதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

தமிழ் பேசும் மக்களின் இரு கண்களைப் போன்றது வடக்கு - கிழக்கு. கிழக்கிலே வாழுகின்ற எமது மக்கள் விடுதலை வேட்கையுடன் தேசியத்தைத் தங்களுடைய மூச்சிலும் தாங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஈழவிடுதலைப் போராட்டத்திலே கிழக்கின் பங்களிப்பு என்பது முதலிடத்தையே பெற்று வந்துள்ளது. எத்தனையோ போராளிகள் பொது மக்கள் எல்லைகளைக் காப்பதில் தமது உயிர்களைத் துச்சமென மதித்து நின்ற வேளை கருணா போன்றவர்கள் சிங்கள இனவாதிகளுடன் இணைந்து வடக்கையும் - கிழக்கை யும் பிரிக்க முனைவது வேதனையைத் தருகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு தராத சிங்களப் பேரினவாத அரசியல் தலைமைகள் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக பேச்சுவார்த்தை எனும் மாயையைக் காட்டி காலத்தை இழுத்தடிப்புச் செய்து வந்துள்ளதே வரலாறு. இந்த நிலையில் வடக்கு - கிழக்கு என்பது இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கும் தமிழர் மீது மீண்டும் ஒரு போரைத் திணிப்பதற்குமே என்று தான் நான் கருதுகிறேன்.

வடக்கிலிருந்து கிழக்கையோ கிழக்கிலிருந்து வடக்கையோ பிரிப்பதற்கு எந்தச் சிங்களச் சக்தியாலும் முடியாது. இணைந்த தமிழர் தாயகத்



தைப் பிரிக்க 7 கட்சியல்ல எத்தனை கட்சி சேர்ந்தாலும் அது முடியாத காரியம். வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது தமிழரது மூச்சு. அதை யாராவது பிரிக்க முனைந்தால் அதை முறியடிக்க இரத்தம் சிந்தவும் தமிழ் சமூகம் தயங்க மாட்டாது.

வீண் கற்பனைகளைத் தவிர்த்து நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சியை மேற்கொள்ளுங்கள். இல்லை எம்மைச் சீண்டித் தான் பார்க்க வேண்டுமென்றால் அதனை எதிர்கொள்ள ஒற்றுமையோடு காத்திருக்கிறது தமிழ்ச் சமூகம். ஆகவே, வீணாக நேரத்தைக் கழிக்காது எல்லோரும் சேர்ந்து நிரந்தர சமாதானத்துக்காக ஒத்து ழைக்க வேண்டுமென்று தமிழ் பேசும் மக்கள் சார்பாக சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார். (மோ)

## தொழில்சார் பயிற்சி நெறி விடத்தல்தீவில் ஆரம்பம்!

மன்னார் —

மன்னார் விடத்தல்தீவு கிராமத்தில் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் தொழில்சார் பயிற்சி நெறி ஆரம்பநிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் சமுதாய மீள் கட்டுமான அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் இந்தக் கிராம மாதர்களின் தொழில் முயற்சியைக் கருத்திற்கொண்டு விடத்தல்தீவு கிராம திட்டச் செயலகத்தில், கிராம இணைப்பாளர் ரோ.பாவிலு தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை விடத்தல் தீவு பங்குத்தந்தை அருட் திரு.அருள்நாதன், கிராம அலுவலர் சீமான்பிள்ளை, விடத்தல்தீவு காவல் துறைப் பொறுப்பாளர் எஸ்.கனக சுந்தரம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

ஆசியுரையைப் பங்குத்தந்தை வழங்க, திட்ட விளக்கத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழக சமுதாய மீள் கட்டுமான அபிவிருத்தித்திட்ட இணைப் பாளர் அ.லோகநாதன் அளித்தார்.

இந்த தொழில்சார் பயிற்சிக்கான விளக்கத்தையும், செயன்முறைப் பயிற்சியையும் அகிலன் சுப்பகூட் நிறுவன உரிமையாளர் ஆ.கா. ஸ்ராட், பி.மொரீனாகுறூஸ், செல்வி வெ.மொறின் அஸ்வினி ஆகியோர் வழங்கினர்.

இந்தப் பயிற்சி வகுப்பானது தொடர்ச்சியாக 15 நாட்கள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.



வட்டக்கச்சி சில்வா வீதியில் இருந்து சந்தையடிப் பகுதியை நோக்கிச் செல்லும் வீதி - கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் நிதியுதவியுடனும், பொதுமக்களின் பங்களிப்புடனும் புனரமைக்கப்படுவதைப் படத்தில் காணலாம். படம்- இந்துமதி

## சுனாமியினால் பாதிப்படைந்த மீனவர்களுக்கு கட்டுமரங்கள்

ஆழியவளை —

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆழியவளை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த 125 பயனாளிகளுக்கு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சிறுவர் பாதுகாப்பு நிதியம் 125 கட்டுமரத் தொகுதிகளை வழங்கிவருகிறது.

இதன் முதற்கட்டமாக ஒவ்வொன்றும் 1 இலட்சம் பெறுமதியான 42 கட்டுமரத் தொகுதிகள் 42 பயனாளிகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசப்பணிமனையில் வைத்து வழங்கப்பட்டன.

சமாசத்தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமாச சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (21)

## இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்ற அறுவடை விழா!

கிளிநொச்சி—

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் வே.க.இரத்தினகுமார் தலைமையில் கடந்த வியாழக்கிழமை விவசாய அறுவடை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - மங்கள விளக்கைப் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் நிர்மலன், உப செயலாளர், சந்திரன்,பவாசண்முகம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். பாடசாலைக் கொடியை வித்தியாலய அதிபர் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து அறுவடை நிகழ்வு இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.தனராஜ் பிரதம விருந்தினராகவும், கிளிநொச்சி வலய விவசாய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தி.திலீபன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

அத்துடன் பிற பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து பரிசில் வழங்கல் நிகழ்வும், கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (இ)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கான திட்டங்களை நிறுத்த வேண்டாம்

### ஞானம் வேண்டுகோள்!

புளியங்குளம் —

சமாதானப் பேச்சுகள் நடப்பதையோ, அல்லது யுத்தமொன்று ஏற்படப் போவதையோ பார்த்துப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வேலைத் திட்டங்களை தாமதப்படுத்தவோ, நிறுத்தவோ வேண்டாமென வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம், வவுனியா மாவட்டத்தில் செயற்பட்டு வரும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புளியங்குளத்திலுள்ள வவுனியா மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் வவுனியா மாவட்டத்தில் பணியாற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும், மாவட்ட அரசியல் துறையினருக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் நடப்பாண்டுக்கான அரச சார்பற்ற வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும், நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசிய சேவைகளை இனங்கண்டு அதற்கேற்ப வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அண்மையில் ஏற்பட்ட போர் நெருக்கடிகளால் இடம்பெயர்ந்த மக்களின் நல்வாழ்வுக்கான வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுத்துமாறும் தொண்டுநிறுவனப் பிரதிநிதிகளிடம்ஞானம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் பி.என். சிங்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் எஸ்.திருஞானசம்பந்தமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்

## புதிய கட்டடத்தில் இயங்கவுள்ள நெடுங்கேணி வைத்தியசாலை

நெடுங்கேணி —

நெடுங்கேணி சுற்றயல்கூறு அரசினர் வைத்தியசாலை அடுத்த மாதம் தொடக்கம் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளதாக வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் தெரிவித்துள்ளார்.

1997ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இந்த வைத்தியசாலை முற்றாக அழிக்கப்பட்டது. படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தை ஓயாத அலைகள் நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் மீட்டெடுத்தனர்.

படையினரால் அழிக்கப்பட்ட கட்டடப் பகுதியில் இயங்கி வந்த இந்த வைத்தியசாலைக்குப் புதிதாக கட்டடமொன்று கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்த வைத்தியசாலை இயங்கவுள்ளது.

## விழிப்புணர்வு கருத்தரங்கும் சிரமதானப் பணிகளும்!

பூநகரி —

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் - செல்வபுரம் இடைத்தங்கல் முகாம்களில் சுகாதார விழிப் புணர்வுக் கருத்தரங்கும், சிரமதானப் பணிகளும் இடம்பெற்றுள்ளன.

கடந்த 13ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணிகளில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தொண்டர்கள், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைத் தொண்டர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் ஒன்றிணைந்து பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டனர். (பூ)

## கால்நடைகளுக்கு கட்டுப்பாட்டை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்

பூநகரி—

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படவுள்ளதால் கால்நடைக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள் ளது.

மேற்படி கோரிக்கையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப் பகுதிப் பொறுப்பாளர் அணியழகன் விடுத்துள்ளார். இனிவரும் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோகப் பயிர்ச் செய்கையைக் கருத்தில் கொண்டும், வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்கிலும் கால்நடை களை ஏனையவர்களுக்கு இடையூறு விளைவிக்காமல் வளர்க்குமாறு அவர் தெரிவித்தார். (பூ)